SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 6, Pages:56
January-2022, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜனவரி 2022

விலை ரூ.5/-



நித்யாய நிரவத்யாய
சத்யா நந்த சிதாத்மனே
சர்வாந்த்ராத்மனே
ஸ்ரீமத் வேங்கடேசாய மங்களம்

- வேங்கடேஸ்வர மங்களாசாசனம்


29-11-2021
முதல்
08-12-2021
வரை
திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதி
தாயாருக்கு
ஏகாந்தமாக
நடைபெற்ற
பிரம்மோத்ஸவ
திருக்காட்சிகள்
















*நிமித்தாநி ச பச்யாமி*
*விபரீதாநி கேசவ ।*
*ந ச ச்ரேயோநுபச்யாமி*
*ஹத்வா ஸ்வஜநமாஹவே॥*

**கேசவா! கெடுதல்களை விளைவிக்கக்கூடிய சகுனங்களையும் காண்கிறேன். போரில் நம் உறவினர்களைக் கொன்று, எந்த மேன்மையையும் நான் காணவில்லை.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–31*



*மகாயாம் மகரே மாஸே சக்ராம்சம்*
*பார்க்கவோத்பவம் ।*
*மஹீஸார புராதீசம் பக்திஸாரமஹம்*
*பஜே ॥*

**தையில் மகத்தன்று சக்கரத்தாழ்வானின் அம்சமாக பார்க்கவ மஹரிஷிக்குப் பிறந்தவராய், திருமழிசைக்குத் தலைவரான பக்திஸாரர் என்னும் திருமழிசையாழ்வாரிடம் நான் பக்தி செலுத்துகிறேன்.**

*–குருபரம்பரா ப்ரபாவம்*

# கோமாதா எனும் காமதேனு

நமது இந்து சம்பிரதாயத்திலும், தர்ம சாஸ்த்திரங்களிலும், புராணங்களிலும், இதிகாசங்களிலும், பசுவை மேன்மையானதாகப் பறைசாற்றப்படுகிறது. தாய் தனது குழந்தைகளைக் காப்பது போல பசுவும் நம்மை காக்கின்றது. ஆகையினால்தான் பசுவை "கோமாதா" என்கின்றனர். மானிடரின் கோரிக்கைகளை நிறைவேற்றி அவனுடைய ஆயுள் ஆரோக்கியத்தைக் காக்கும் பசுவை நாம் காப்பது நமது தர்மமாகும். பசுவின் சரீரத்தில் அனைத்து தேவதைகளும் இருப்பதாகக் கூறுவதால் இந்துக்களால் வணங்கப்படும் தெய்வமாக விளங்குகிறது. நமக்கு அனைத்து செல்வங்களையும் கிடைக்க அருள வல்லது கோமாதா பூஜையே ஆகும். திருவேங்கடமுடையானின் அவதார வரலாற்றிலும் கூட, பசுதான் முதலில் தரிசித்து சீனிவாசனே கோவிந்தன் என்பதையும் நமக்கு காட்டியருளியது. புற்றிலே வீற்றிருந்த எம்பெருமானுக்கு தன் மடியிலிருந்த அமிர்தமான பாலை தானாகவே சுறந்து இறைவனின் பசியைப் போக்கியது. மனிதன் உயிருடன் இருக்கும் பொழுது அவனுக்கு ஐச்வர்யம் அளிக்கும் பசுவை "கோதானம்" செய்வதன் மூலம் அவன் இறந்த பின்னும் உத்தம லோகத்தில் அவனை சேர்க்கின்றது.

காமதேனு : தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது அமிர்தத்துடன் கல்ப விருக்ஷம், காமதேனு, மகாலட்சுமியும் வெளிப்பட்டனர். காமதேனுவின் சந்ததியே பசுக்களாகும். இவ்வுலகில் காமதேனுவின் மூலமாகத்தான் கால்நடை இனமே தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன.



பஞ்சகவ்வியம் : பசுவின் மூலமாக கிடைக்கக் கூடியதே பஞ்ச கவ்விய மாகும். பால், தயிர், நெய், கோஜலம் (கோமூத்திரம்), கோமலம் (சாணம்) என்ற இந்த ஐந்து பொருட்களும் பசுவிடமிருந்து கிடைப்பதால் இவற்றை பஞ்ச கவ்வியம் என்பர்.

அதிகாலையில் பசுவை காண்பது மங்களகரமானதாகும். பூஜிப்பது மிகவும் நன்மையளிக்கும். பசுவிற்கு இணையானது ஒன்றுமில்லை.

## ஸ்ரீவேங்கடேஸ்வரா
## கோசம்ரக்ஷண சாலை, திருப்பதி

தி.தி.தே. பசுக்களை பாதுகாப்பதற்காக "ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளை" நிறுவி, பக்தர்களும் நன்கொடைகளை வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தினர். நன்கொடை ரூ.1,000/– குறையாமல் செயலாட்சித் தலைவர், எஸ்.வி.ஜி.எஸ்.டி., தி.தி.தே. திருப்பதி எனும் பெயரில் வங்கி வரைவோலையை எடுத்து, இயக்குனர், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா டிரஸ்ட், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, தி.தி.தே. எஸ்.வி.யூ. தபால், திருப்பதி – 517 502 எனும் முகவரிக்கு அனுப்பவும். ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா அறக்கட்டளைக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு, வருமான வரி சட்டம் 1961–ன்படி 80 ஜி. (5) (ஸஷ்) வருமான வரி விலக்கும் உண்டு.

**பசுவைக் காப்போம்!** **நலம் பெறுவோம்!!**





வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

**சமய மாத இதழ்**

## ஜனவரி 2022

மலர் 01
இதழ் 06

*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
*செயலாட்சித் தலைவர், தி.தி.தே.*
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
*ஆசிரியர் :*
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
*அச்சிடுபவர் :*
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
*சிறப்பு அலுவலர்*
*தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.*
டி.டி.பி.
*பிரதான ஆசிரியர் அலுவலகம்,*
*தி.தி.தே. திருப்பதி.*
*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

## உள்ளுறை


பக்கம்

**மனிதர்களைப் புதுபிக்கும் பண்டிகை** 7
*- திரு. எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம்.*
**திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் :**
**வேண்டியதைத் தரும் வேங்கடம்** 11
*- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*
**தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** 15
*- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.*
**ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : சாரித்ரேண யுக்தன்** 18
*- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.*
**ஸ்ரீகூரத்தாழ்வான்** *- திருமதி பிரேமா வரதன், புதுதில்லி.* 20
**ஜோதிட சாஸ்திரம் : வாஸ்து சாஸ்திரம்** 24
*- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, திருவல்லிக்கேணி.*
**திருமலையில் திருவத்யயனோத்ஸவம்** 31
*- கீர்த்திமூர்த்தி உ.வே. தி.அ. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி, திருப்பதி.*
**யோக சாஸ்திரம் : சூரிய நமஸ்காரமும் யோகாசனங்களும்** 33
*- டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர்.*
**ஆழ்வாரின் வாடாத மலர்கள்** 36
*- டாக்டர் கலியன் சம்பத், சென்னை.*
**108 திவ்வியதேச வைபவம் – திருக்காட்கரை** 40
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*
**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்**
**திருநாமமும் உரையும்** 43
*- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*
**ஸ்ரீமத் பகவத்கீதை** *- டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.* 46
**அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை**
**: பரீக்ஷித் மகாராஜன்** *- திரு. சத்யதாரா, சென்னை.* 48
**நீதிக்கதைகள் : தர்மம் தலை காக்கும்** 51
*- திரு. ஜெ.சுவாமிநாதன், சென்னை.*
**சித்திரக்கதை : தியாகபிரம்மம்–தியாகராஜர்** 52

**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : *திருவேங்கடமுடையான், திருமலை.*

பின்னட்டை : *ஸ்ரீராமரை துதிக்கும் தியாகராஜர்.*



# மங்கலம் பொங்கும் பொங்கல்

இந்த உலகத்திற்கு ஒளியூட்டும் சூரியனின் நகர்வினை தட்சிணாயணம், உத்திராயணம் என்று கூறுவர். சூரியன் வடதிசை நகர்வு உத்திராயணமாகும். தென் திசை நகர்வு தட்சிணாயணமாகும். இந்த தட்சிணாயண காலமான ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையில் பகற்பொழுது குறைந்தும் இரவு பொழுது நீண்டும் காணப்படும். அதுமட்டுமின்றி காற்றும் மழையும் அதிகமாகக் காணப்படும். ஆடி மாதம்தான் சகல வஸ்துக்களும் முளைக்கும் காலமாகும். எனவே தான் விவசாயிகளும் இம்மாதத்தில் உழவு செய்யத் துவங்குகின்றனர். இது குறித்தே *"ஆடிபட்டம் தேடி விதை"* என்றனர் பெரியோர். ஆடி மாதத்தில் இருந்துதான் சூரியனில் இருந்து சூட்சும சக்திகளும் வெளிப்படும். எனவேதான் ஆடி மாதத்திலிருந்து வேத பாராயணமும், மந்திரங்களும் மேற்கொள்கிறோம். ஆதலால்தான் ஆடி மாதம் முதற்கொண்டு தட்சிணாயணம் நிறைவடையும் மார்கழி மாதம் வரை இறை வழிபாடுகளையும் விரதங்களையும் அனுசரிக்கின்றோம்.

ஆடி மாதத்தில் இறைவழிபாட்டோடு துவங்கும் தட்சிணாயணம் மார்கழி மாதத்தில் இறைவழிபாட்டுடனே முடிவடைகின்றது. ஆடி மாதம் போன்றே மார்கழி மாதமும் இறைவழிபாட்டிற்கு உகந்த மாதமாக விளங்குகிறது. இம்மாதத்தில்தான் ஆண்டாள் ஸ்ரீகிருஷ்ணனை துதித்து விரதமிருந்து அந்த எம்பெருமானோடு ஐக்கியமானாள். ஸ்ரீகிருஷ்ண பகவானும் பார்த்தனுக்கு கீதை எனும் பொக்கிஷத்தை உபதேசித்த மாதமாகும். வைகுந்த வாசனான எம்பெருமானின் வைகுந்த வாசல் திறப்பதும் இம்மாதத்தில்தான். அதுமட்டுமின்றி தேவர்களுக்கு இது விடியற்காலை பொழுதாகும். அனைத்து ஆலயங்களும் விடியற்பொழுதே திறந்திருக்கும் மாதமும் இதுவே. உத்தராயணம் புண்ணிய காலமாவது போன்றே தட்சிணாயணமும் புண்ணிய காலமாகவே விளங்குகிறது.

பன்னிரு மாதங்களில் தட்சிணாயண முடிவும் உத்திராயண துவக்கமும் ஆன முறையே மார்கழி தை மாதங்களும் இறை வழிபாட்டிற்கு உகந்த, சிறந்த மாதங்களாகும். மார்கழி எப்படி தேவர்களுக்கு சிறந்ததோ, தை மாதம் மானிடர்களின் மேன்மைக்கு வழி வகுக்கும் மாதமாகத் திகழ்கின்றது. சான்றோரும் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்றே கூறியுள்ளனர்.

*"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை"* – திருக்குறள் 1031.

துன்பங்கள் பல இருந்தாலும் உழவுத் தொழிலே உலகத்தில் சிறந்தது என்பது வள்ளுவனின் திருவாக்காகும். உலகத்திற்கு உணவு உற்பத்தி செய்து தரும் உழவன் ஆண்டு முழுவதும் தான் பாடுபட்டதற்கான பலனையும் தை மாதத்தில்தான் காண்கிறான். அந்த மகிழ்ச்சியில் இறைவனுக்கும் நன்றி செலுத்துகிறான். உணவு உற்பத்திக்கு உதவி புரிந்த இயற்கைக்கும், சூரியனுக்கும், மாடுகளுக்கும் தான் உற்பத்தி செய்த உணவுகளை புதுப்பானையில் இட்டு, பொங்கி வரும் போது மங்கலம் பொங்க "பொங்கலோ பொங்கல்" என்ற மங்கள ஒலி எழுப்புகிறான். பின்னர் இறைவனுக்கு படைத்து சுற்றத்தாரோடு கூடி உண்டு இன்புறுகிறான்.

தன் உழைப்பின் பயனைக் கொண்டு தான் மட்டும் மகிழாது தன் உற்றார் உறவினருடன் கூடி மகிழ்ந்து கொண்டாடும் ஒரு சமுதாயக் கூட்டு விழாவாக இப்பொங்கல் திருநாள் விளங்குகிறது.

சூரியன் புதிய திசையை நோக்கி நகருவது போன்று நாமும் பழையன கழித்து, புதியன புகுத்த, மனதில் தேங்கி இருக்கும் தேவையற்ற பகைமை உணர்ச்சி, வன்மம், மனத்தாபம் இவற்றை அறவே நீக்கி விட்டு புதிய நல்வாழ்வை நோக்கி பயணிப்போமாக.

வேத நெறியினாலும் புராணச் சிறப்பினாலும் பிணைக்கப்பட்ட நம் பாரததேசம், பாரம்பரியம் மிக்க பண்டிகைகளைக் கொண்டாடுவதன் மூலம் அந்தப் பிணைப்பைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. ஸ்ரீராமநவமி, ஸ்ரீகிருஷ்ணஜயந்தி, விநாயக சதுர்த்தி, சிவராத்திரி, துர்காபூஜை போன்ற தெய்வீகச் சிறப்புமிக்க திருநாள்களை நமது பாரததேசத்தின் குடிமக்கள் கொண்டாடி வருகின்றனர்.

அதைப் போலவே பொங்கல், தீபாவளி முதலிய பல பண்டிகைகளையும் நமது தேசத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அனைவரும் கொண்டாடி வருகின்றனர்.இவ்விரு பண்டிகைகளிலும் தேவதா வழிபாட்டுக்கு இருக்கின்ற அதே முக்கியத்துவம் கொண்டாட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

“கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்” என்று ஸ்ரீஆண்டாள் நாச்சியார் அருளியதை ஒட்டி, நம் தேசத்து மக்கள் அனைவரும் புத்தாடைகளை அணிந்து சுவையான உணவுப் பண்டங்களைச் சமைத்து அவற்றைத் தம்தம் குடும்பத்தினருடன் இணைந்து சுவைத்து மகிழ்வதுடன், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட பலருடனும் பகிர்ந்து இன்புறுவதும் இப்பண்டிகைகளின் சிறப்பு அம்சமாகும். இவ்விரண்டு பண்டிகைகளுக்குள் பொங்கல் திருவிழாவிற்கென்று ஒரு தனிச் சிறப்பு உண்டு.

மனித வடிவிலே உள்ள உறவுகள், சுற்றங்கள் போலவே, உழவுக்கும் தொழிலுக்கும் உதவி புரிந்து தங்கள் எஜமானர்களுடைய குடும்ப உறுப்பினர்களாகவே விளங்கும் கால்நடைகளுடனும் இணைந்து கொண்டாடப்படுவதே இந்தப் பொங்கல் திருவிழாவின் மகத்துவமாகும்.

பொங்கல் பண்டிகையானது, நம் பாரதத் திருநாட்டின் பல்வேறு மாநிலங்களிலும், “மகா சங்கராந்தி”, “மாகி”, “மகா சஜா”, “லொஹரி” என்ற பெயரிலும், ஆந்திரப் பிரதேசத்தில் “பெத்த பண்டுகா” என்றும், தமிழ் நாட்டில் “பொங்கல்” என்ற பெயரிலும், நேபாளத்தில் “மாகே சங்கராந்தி” என்ற பெயரிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. மேலும், பாரத நாட்டின் கலாசாரத்துடன் நெருக்கமான தொடர்புடைய தாய்லாந்து, மியான்மர், லாவோஸ், கம்போடியா உள்ளிட்ட பல ஆசிய நாடுகளிலும் பல்வேறு பெயர்களில் இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது.





# மனிதர்களைப் புதுபிக்கும் பண்டிகை

திரு. எஸ். ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685





சமூகமாக இணைந்து வாழ்வதுடன், இயற்கையின் துணை கொண்டு உழைத்து உணவுப் பயிர்களை விளைவிக்கவும், கற்றுக் கொண்ட மனிதர்கள் அந்தத் தொழிலுக்கு அருந்துணையாக விளங்கும் தண்ணீரை அம்மழை வழியாகக் கொடுக்கும் தேவேந்திரனுக்கு நன்றி செலுத்துவதாக இப் பொங்கல் பண்டிகையின் முதல் நாளான, போகிப் பண்டிகை அமைகிறது. மார்கழி மாதத்தின் இறுதி நாளில் இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

மழைக்கு உரிய தேவதை வருணனே என்றாலும், அவ்வருணனுக்கும் மேலான தேவனாகிய தேவேந்திரனை மகிழ்விக்கும் விதமாக இப்பண்டிகை கொண்டாடப்படு கின்றது. மழைக்கடவுளாகிய வருணனுக்குக் கட்டளையிட்டுப் பெரும் மழையைப் பெய் விக்கவும், பெய்யும் மழையை நிறுத்தவும் தேவேந்திரனுக்கு அதிகாரம் உள்ளது.

பொதுவாக, இவ்வுலக இன்பங்களைப் பெருமளவில் அனுபவிப்பவர்களை "சுக போகி" என்று அழைப்பது வழக்கம். இப் பூவுலக வாழ்க்கையில் தான தருமங்கள் உள்ளிட்ட பல்வேறு புண்ணியச் செயல்களைப் புரிந்தவர்கள் தங்களின் இறப் பிற்குப் பிறகு சுவர்க்கம் எனப்படும் தேவ லோகத்திற்குச் சென்று பல்வேறு இன்பங்களை அனுபவிப்பார்கள். அவ்வாறு போகங்களை அனுப விக்கும் தேவர் உலகின் தலைவனாகிய தேவேந்தி ரனுக்கு "போகி" என்றொரு பெயர் உண்டு.



எனவே, உழவுத் தொழிலுக்கு மிக முக்கியத் தேவையான தண்ணீரைக் கொடுக்கும் வருணனைப் போன்ற பல்வேறு தேவதைகளுக்கும் தலைவனாகிய இந்திரனை மகிழ்விக்கும் விதமாக "போகி" என்ற பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது.

முற்காலத்தில் இதனை "இந்திர விழா" என்ற பெயரி லேயே நம் தேசத்து மக்கள் கொண்டாடியதாக சிலப்பதிகாரம் உள்ளிட்ட பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

குளிர்காலங்களில் மக்கள் குழுக்களாகக் கூடி நெருப்பு மூட்டிக் குளிர்காய்வது வழக்கம். இவ்வழக் கத்தினை ஒட்டி, அவரவர் வீடுகளில் உள்ள பயன்படுத்த முடியாத பழம் பொருட்களை வீதியில் வைத்து நெருப்பு மூட்டி அதனைச் சுற்றி நின்று குளிர்காய்ந்தபடியே பறைகளைக் கொட்டியபடி ஆடிப்பாடி மகிழ்வது போகிப் பண்டிகையின் முக்கிய அம்சமாகும்.

பயிர்கள் வளர்வதற்கு மழை எவ்வளவு முக்கியமானதோ அதற்குச் சற்றும் குறைவில்லாத முக்கியத்துவம் சூரிய வெளிச்சத்திற்கும் உண்டு. உண்மையில் கூறுவதென்றால், கடல் நீரை ஆவியாக்கி அதன் மூலம் மழை மேகத்தினை உருவாக்கி நமக் கெல்லாம் மழைநீர் கிடைக்க உதவுவதே சூரியன்தான்.

அதே சமயம் மழை பெய்து முடித்த நிலத்தினை விரைவினில் உலரச் செய்து, அதிகப்படியான மழை நீரினால் பயிர்கள் அழுகிவிடாதபடி பாதுகாப்பதுடன், அப்பயிர்கள் வளர்வதற்கான உயிர்ச் சத்தினை அளிப்பதும் சூரியன்தான்.

அச்சூரிய பகவான் வானிலுள்ள மகர ராசியில் சஞ்சரிக்கத் தொடங்கும் திருநாளாகிய தை முதல் நாளில் புத்தாடைகளை அணிந்து புதுப்பானையில் புதுப் பொங்கல் சமைப்பதும், அப்புதுப்பானையில் பொங்கல் பொங்கி வரும் வேளையில் "பொங்கலோ பொங்கல்" என்று குடும்பத்தினர் அனைவரும் ஒரே குரலில் கூறி மகிழ்வதும், புதுப் பொங்கலை சூரிய பகவானுக்குப்

படையலாகப் படைத்து தீபாராதனை செய்து வழிபடுவதும் பொங்கல் பண்டிகையின் சிறப்பு அம்சமாகும்.

இதன் பின்னர் அவரவர் ஊரிலுள்ள திருக் கோயில்களுக்குச் சென்று வழிபடுவதும், வயதில் பெரியவர்களை நமஸ்கரித்து ஆசி பெறுவதும் தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்படும் வழக்கம் ஆகும்.

பொங்கல் பண்டிகையின் மூன்றாவது நாள், அதாவது தை மாதம் இரண்டாம் நாள் "மாட்டுப் பொங்கல்" என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

உழவுத் தொழிலுக்கும் அதன் மூலம் உணவு விளைச்சலுக்கும் உதவி செய்திடும் காளைகளை யும், பாலைப் பொழிந்து தரும் பசுக்களையும் நன்றாகக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு அழகிய வர்ணங்களைத் தீட்டி, புதியதாக வாங்கிய மணி, கொப்பு, மூக்கணாங்கயிறு ஆகியவற்றுடன் மலர் மாலைகளையும் சூட்டி அலங்கரித்து அவற்றுக்கு தீபாராதனை செய்து உணவூட்டி மகிழ்வதுடன், தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை ஊர்வலமாக அழைத்துச் சென்று மகிழ்வதும் மாட்டுப் பொங்கலின் சிறப்பம்சங்களாகும்.

இவ்விதமாக மழையைக் கொடுக்கும், வருணனுக்கும் தலைவனாகிய இந்திரன், உயிர்ச் சத்தினை அளிக்கும் சூரியன், உழவுக்கும் பால் வளத்திற்கும் துணை புரிந்து அருளும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவித்து மகிழ்ந்த



பின்னர், தை மாதத்தின் மூன்றாம் நாளில் தங்களு டைய உறவு சுற்றங்களுடன் கூட்டமாகச் சென்று, கடற்கரை, ஆற்றங்கரை போன்ற பொது இடங்களில் கூடியிருந்து சித்ரான்னங்கள் எனப்படும் பல்வேறு உணவு வகைகளை உண்டு, கதைகளைப் பேசி, உறவுகளை வலுப்படுத்திக் கொண்டு அவரவர் வீடுகளுக்குத் திரும்பும் திருவிழாவாகக் "காணும் பொங்கல்" கொண்டாடப்படுகின்றது.

புத்தாடைகள், புதுப் பலகாரங்கள், வீர விளையாட்டுக்கள், கேளிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இப்பொங்கல் பண்டிகையில் காலம் காலமாக இளையதலைமுறையினர் அதிக ஈடுபாடு காட்டுவது கண்கூடு.

இருந்தபோதிலும், நவீனத் தொழில் நுட்பங் களின் வளர்ச்சி காரணமாகத் திரைப்படம் உள்ளிட்ட ஊடகங்களின் வரவினால் பெரும்பாலான இளைஞர் களும் இத்திருவிழாக்களைத் தங்கள் பொழுது போக்கிற்கான வாய்ப்பாகவே கருதி வருவதுடன், நமது பாரம்பரியத்தின் பெருமைகளை உணர்ந்து கடைப்பிடிப்பதில் ஆர்வம் காட்டுவது குறைந்து கொண்டே வருகின்றது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரையில் நாடகம் திரைப்படம் உள்ளிட்டவை தேச பக்தி, தெய்வ பக்தி ஆகியவற்றை வலியுறுத்தும் கதை களையே உருவாக்கி வந்தன. ஆனால், தற் போதைய சூழல் அவ்வாறு இல்லை. தேசபக்தியையும் தெய்வ பக்தியை யும் தம்முடைய இரண்டு









ஸப்தகிரி
வாசகர்களுக்கும்,
முகவர்களுக்கும்,
எழுத்தாளர்
பெருமக்களுக்கும்
எங்களுடைய
உளங்கனிந்த
இனிய

# பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்

–பிரதான ஆசிரியர்


கண்களாகக் கொண்டு கவிதைகளைப் பொழிந்த மகாகவி பாரதியார் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம்" என்று பாடியுள்ளார்.

இன்றைய நவீன தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள் மகாகவி பாரதியாரின் வைர வரி களைக் கருத்தில் கொண்டு, உழவுக்கும் தொழிலுக் கும் வந்தனை செய்கின்ற நமது பாரத தேசத்தின் பாரம்பரியமான பண்டிகைகளை வெறும் பொழுது போக்கிற்கான வாய்ப் பாகக் கருதாமல் உண்மையான அக்கறை யுடன் கொண்டாட முன் வர வேண்டும்.



மேலும், உணவளிக்கும் உழவிலும், உயர் வளிக்கும் பிற தொழில்களிலும் உற்சாகத்துடன் ஈடுபட்டு நம் பாரத தேசத்தின் ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கும் பங்களிக்கும் உத்வேகத்தை நம் இளைஞர் சமுதாயம் பெற வேண்டும்.

இந்த பிலவ வருடத்தின் பொங்கல் பண்டிகை இந்தத்திசையில் நல்லதொரு தொடக்கத்தை அளிக்க வேண்டும் என்ற நம் பிரார்த்தனைகளை எல்லாம் வல்ல ஸ்ரீஅலர்மேல் மங்கை உடனுறையும் திருவேங்கடமுடையானின் திருவடிகளில் சமர்ப்பிப்போம்.



# மங்கள சுலோகங்கள்

*ஹரம் ஹரிம் ஹரிஸ்சந்த்ரம் ஹநூமன் தம் ஹலாயுதம் ।*
*பஞ்சகம் வை ஸ்மரேந்நித்யம் கோரஸங்கடநாசனம் ॥*

**அரன், அரி, அரிச்சந்திரன், ஹனுமான், பரசுராமர் ஆகிய ஐவரையும் கொடிய சங்கடங்கள் அழிவதன் பொருட்டுத் தினமும் நினைக்க வேண்டும்.**



# வேண்டியதைத் தரும் வேங்கடம்

## 9

திங்கள்தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்

– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

**மூன்றாந் திருவந்தாதியில் ஒரு பாசுரம்.**

*தெளிந்தசிலாதலத்தின் மேலிருந்தமந்தி,*
*அளிந்தகடுவனையேநோக்கி-விளங்கிய*
*வெண்மதியம்தாவென்னும்வேங்கடமே, மேலொருநாள்*
*மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு.*

(மந்தி – பெண்குரங்கு: கடுவன் – ஆண்குரங்கு;)

ஆழ்வார்கள் வேங்கடவனைப்பாடும்பொழுது, வேங்கடத்தின் சிறப்பையும் அங்கு நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளையும் ஊன்றிக்கவனித்து, தங்கள் பாசுரங்களில் பதிவு செய்கின்றார்கள். இயற்கையின் பரிமாணத்தில், இறையருள் கரந்தும் கலந்தும் கிடப்பதை நமக்கு நினைவூட்டுகின்றனர். இதில் மறைமுகமாக நான்கு கருத்துக்கள் உள்ளன.

1. இயற்கையை ரசியுங்கள்.

2. இயற்கையோடு இணைந்து வாழுங்கள்,

3. இயற்கையை சிதைக்காமல் வாழுங்கள்,

4. நீங்கள் காணும் ஒவ்வொரு காட்சிகளிலும் நிகழ்வுகளிலும் இறை தத்துவம் ஒளிந்துக் கிடப்பதைக் கண்டு ரசியுங்கள். ஆழ்வார்கள் பாசுரங்கள் மூலம் கூறும் செய்திகள் இவை.

இங்கே ஒரு அழகான காட்சியை விவரிக்கின்றார் பேயாழ்வார். வேங்கடமாமலை அழகானமலை.

* * * * * * * * * * * * * * * *

விண்முட்டும் அளவு உயர்ந்த மலை. சரி, அது சிறுகுன்று தானே. அதற்கு இத்தனை உணர்வு ஏன்? என்ற கேள்வி எழலாம். ஒரு பொருள் அல்லது இடம் எதுவாக இருப்பினும், அதனைத் தகுந்தவர் ஏற்பதால் அல்லது பயன்படுத்துவதால் அது பெருமை அடைகிறது.

நாம் ஒரு எழுதுகோலை பயன்படுத்துகிறோம், ஒரு பெரிய அறிஞர் அதே போன்றதொரு எழுதுகோலை பயன்படுத்துகிறார். நம்முடைய எழுதுகோலைவிட, அந்த அறிஞர் பயன்படுத்தும் எழுதுகோலுக்கு மதிப்பு அதிகம். அவர் காலத்திற்குப் பின்னே அவர் எழுதுகோலை காட்சிப் பொருளாக வைப்பார்கள். நான் எழுதுகின்ற சாதாரண பேனா தானே அது என்று நினைக்கமாட்டார்கள்.

காரணம், அதை பயன்படுத்தியவர்களின் புகழும் அந்த பேனாவுடன் இணைந்து விடுவதால், அந்த பேனாவுக்கு ஒரு மதிப்பு வந்துவிடுகிறது. “இந்த பேனாவாலே இத்தனை எழுதினார்” என்று அந்த பேனாவை வியப்போடு பார்ப்பார்கள்.

அதை ஏலத்திற்கு விட்டால் கோடிக்கணக்கான ரூபாய் கொடுத்து அதை வாங்குவார்கள். எனவே ஒரு பொருளை தகுந்தவர் பயன்படுத்தும்போது அதன் பெருமை பல மடங்காகிறது.

**பக்தர்களுக்கு வேண்டுகோள்**

1. முகக்கவசம் தவறாமல் அணிந்திருத்தல் வேண்டும்.
2. சமூக இடைவெளியை கடைப்பிடித்தல் வேண்டும்.
3. சானிடைசர் தவறாமல் உபயோகித்தல் வேண்டும்.
4. கூட்டமாக எங்கும் இருத்தல் கூடாது.
5. தவறாமல் கோவிட் நிபந்தனைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.
6. திருடர்கள் உள்ளனர். ஜாக்கிரதை.
7. தளாரிகளை நம்பி ஏமாறாதீர்கள்.
8. யாத்திரிகர்கள் தமது உடைமைகளை பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.
9. அந்நியர்களிடம் ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்.

நாம் ஒரு ஆபரணம் அணிகிறோம், இறைவனுக்கு அணிவிக்கிறோம். எது பெருமை? இறைவன் அணியும் ஆபரணத்துக்கல்லவா அந்த பெருமை! எல்லாம் பூ மாலைதான், ஆனால் "ஆண்டாள் மாலை" என்று ஏன் சொல்கின்றோம். ஆண்டாள் பெயர் அந்த மாலைக்கு ஒரு சிறப்பை தந்துவிடுகிறது.

தினசரி உணவை உட்கொள்கிறோம் "உண்ணும் சோறு" என்கிறார் ஆழ்வார். அது இறைவனுக்குக் கண்டருளச் செய்தால் அதுவே பிரசாதமாகி விடுகிறது.

திருமலையில் மட்டுமல்ல, இந்தியாவின் பல பகுதிகளிலும், எத்தனையோ மலைக்குன்றுகள் பரவிக்கிடக்கின்றன. ஆனால், ஒரேயொரு குன்றை நோக்கி மட்டும் லட்சக்கணக்கான மக்கள் தினம் தினம் திரண்டு வருவதன் நோக்கம் என்ன? அந்த குன்றின் மீது, விண்ணுக்கும் மண்ணுக்கும் வைப்பாக விளங்கும் வேங்கடவன், நின்று அருள்புரியும் திறம்தான் காரணம். ஓங்கி உலகளந்த உத்தமன் அந்த மலைமீது நிற்பதால், அது ஓங்கி உயர்ந்த மலையாக மாறிவிடுகிறது.

பகவானுடன் சேர்ந்த எந்த பொருளும் உயர்நிலையில் வைத்துப் போற்றப்படும். அதனால் தான் ஆழ்வார்கள் இந்த வேங்கடமலையையும் மங்களாசாசனம் செய்கிறார்கள்.

"மாமலை ஒன்றுமே தொழ நம்வினைஓயுமே" என்பது நம்மாழ்வார் வாக்கு. ஆழ்வார் ஓங்கி உலகளந்த உத்தமனின் பெருமையை இப்பாசுரத்தில் சுட்டிக் காட்டுகின்றார்.

ஒரு காலத்தில் இந்திரன் தனக்கு அரசு வேண்டுமென இறைவனை வேண்டினான். அந்த அரசு, மாவலியிடமிருந்ததால் அதைப் பெற்றுத் தர வேண்டும் என்று பிரார்த்தித்தான். மாவலியிடம் இருந்து அளந்து பெற வேண்டிய மண்ணை இறைவன் இரந்து பெற்றுக் கொடுத்தான்.

தன் பக்தனுக்காக யாசகம் கேட்கவும் துணிந்தான் என்பது பக்தர்களிடம் அவன் கொண்டு இருந்த அன்பினைக் காட்டுகிறது.

இந்த அன்பு வேங்கடமாமலையில் இயல்பாகவே வெளிப்படும். அன்பு இல்லாதவர்கள் கூட வேங்கடம் அடைந்துவிட்டால், அன்புக் கொண்டவர்களாக மாறிவிடுவார்கள். அத்தகைய அன்பினை வெளிப்படுத்தும் பாசுரம்தான் இது.

வேங்கடமாமலையின் சிறப்பு அங்குள்ள சிலாதளங்கள், அதாவது கற்பாறைகள். கற்பாறைகள் மிக உறுதியானது. அகலாதது. பக்தர்களின் திருவடிகளைத் தாங்கும் பேறுபெற்றது. திருவேங்கடமாமலை கற்பாறைகளுக்கு இரண்டு சிறப்பு. 1. பகவானின் திருவடிகளைத் தாங்குகிறது. 2. பகவானை தரிசிக்க வரும் பக்தர்களின் திருவடி நிலைகளையும் தாங்குகின்றது. இந்த இரண்டு தொடர்பும் ஒரு சேர பெற்றதால் தான் "வேங்கட மாமலை ஒன்றுமே தொழ" என்று




## தியான சுலோகங்கள்–93

யோ ஹர்த்தா ஜகதோ தேவ:
கர்த்தா பாலயிதா ச்ய: |
த்ர யகூஷ ஸ்யாஸ்ய ச யோ யோநி
ஸ்தம் விஷ்ணும் தோஷ யாம் யஹம் ||

உலகை படைத்தவனும், காப்பவனும், கடைசியில் ப்ரளய காலத்தில் அழித்து உண்டாக்குபவனும் நித்யனுமான ஸ்ரீமஹா விஷ்ணுவை வணங்குகிறேன்.

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**



பாடுகின்றார் ஆழ்வார். தூய்மையான கற் பாறை, அங்கே ஒரு ஆண் குரங்கும், பெண் குரங்கும் அமர்ந்திருக்கின்றன.

நல்ல பௌர்ணமி இரவு; வெண்மையான நிலா வானில் உலா வர பளிச்சென்று இருக் கிறது. குளிர் மலை. பெண்கள் எப்போதும் அலங்காரப் பிரியர்கள். கண்ணாடியும் சீப்பும் அவர்களது அழகுச் சாதனங்களில் முக்கிய மானவை. பெரியாழ்வார் ஆண்டாள் எப்பொழுதுமே கண்ணாடியும் கையுமாக இருப்பாள் என்பதை ஒரு பாசுரத்தில் காட்டுகின்றார்.

*"காறைபூணும்கண்ணாடிகாணும் தன்*
*கையில்வளைகுலுக்கும்*
*கூறை உடுக்கும் அயர்க்கும்*
*தன்கொவ்வைச்செவ்வாய்திருத்தும்*
*தேறித்தேறிநின்று ஆயிரம் பேர்த்*
*தேவன்திறம்பிதற்றும்*
*மாறில்மாமணிவண்ணன்மேல்*
*இவள்மால்உறுகின்றாளே"*

இப்பொழுதும் வில்லிப்புத்தூரில் ஆண்டாள் முகம் பார்த்த கிணறு, கண்ணாடிக் கிணறு என்று வழங்கப்படுகிறது. அது போகட்டும், இங்கே நிகழ்வுக்கு வருவோம்.

பெண்குரங்குக்கு ஏதோ ஒரு வருத்தம். முகத்தை உம் என்று வைத்திருக்கிறது.

என்ன வருத்தம்? என்ன வேண்டும் உனக்கு? என்று சமா தானம் செய்கிறது ஆண்குரங்கு.

இதோ பாருங்கள், இந்த வீட்டில் எத்தனை பொருட்கள் இருந்து என்ன புண்ணியம், முகம் பார்க்கும் கண்ணாடி இல்லையே. நல்ல வட்டவடிவமான கண்ணாடி ஒன்று எனக்கு வாங்கித்தரக் கூடாதா.

இவ்வளவுதானே, என்ன மாதிரி கண்ணாடி வேண்டும் சொல்.

பெண்களைக் கடைக்கு அழைத்துச் சென்றால், அவர்கள் தங்களுக்கு வேண்டிய பொருளை வாங்கித்தரும் படி கணவனிடம் சுட்டிக் காட்டுவார்கள் அல்லவா! அதைப் போலவே இந்த பெண்குரங்கு ஒரு அழகான கண்ணாடியை சுட்டிக் காட்டுகின்றது. அதுவும் அதன் கைக்கு எட்டும் தூரத்தில்தான் இருக்கிறது. உயர்ந்த மலைச்சிகரத்துக்கு மேலே ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

"அந்த வெண்மதிதான் எனக்கு வேண்டும்". உடனே தருகிறேன் என்று ஆண் குரங்கு மகிழ்ச்சியாகச் சொன்னதாக இக்காட்சியைச் சித்தரிக்கின்றார்.

எதைக் கேட்டாலும் தரும் வேங்கடமலையில் இதைக் கேட்டால் தரமாட்டானா என்ன?

இதில் இன்னொரு விசேஷம் உண்டு. பகவானும்





விரும்பிய பொருள்தானே இந்த சந்திரன். பகவான் கிருஷ்ணாவதாரத்தில் இப்படித்தான் யசோதை இடுப்பில் அமர்ந்துக் கொண்டு அந்த சந்திரன் இங்கே வரவேண்டும் என்று அடம் பிடித்தான். பெரியாழ்வார் இதனை பாடுகின்றார்.

*சுற்றிலும் ஒளிவட்டம் சூழ்ந்து சோதி*
*பரந்தெங்கும்*
*எத்தனை செய்யினும் என்மகன் முகம்*
*நேரொவ்வாய்*
*வித்தகன்வேங்கடவாணன்உன்னை*
*விளிக்கின்ற*
*கைத்தலம் நோவாமேஅம்புலீகடிதோடிவா*

பகவான் கேட்டதைத்தானே பக்தர்களும் கேட்பார்கள். இனி இப்பாசுரத்தின் திரண்ட பொருள்.

“அழகான கற்பாறையின் மீதுஅமர்ந்திருந்த பெண்குரங்கு தனது துணையான ஆண் குரங்கைப் பார்த்து, தனது கூர்ந்த மதியால் மாவலியிடமிருந்து இவ்வுலகத்தை அளந்து பெற்றுக் கொண்டு மகிழ்ந்த வாமனன் திருத்தலமாகும்.

திருமலையில் அந்த வெண்மதியை எனக்குப் பிடித்துத்தா என்று கேட்டது” என்று பாடுகின்றார் பேயாழ்வார். மண்மதியிற் கொண்டுகந்தான்– என்பதற்கு நயமான வியாக்கியானமிது. கேட்டான் கேட்டபடியே தானம் பண்ணுவதே என்று விரதம் பூண்டு மஹாதார்மீகனாக இருக்கிற மாவலியினி டத்தில் யாசகத்தொழில் கொண்டே காரியம் சாதிக்க வேணுமென்று நினைத்துச் சென்றது புத்தி சாதுரியம் என்க.

வெண்மதி என்பதற்கு ஞானம் என்ற பொருளுண்டு. அந்த அறிவைப் பெற திருமலை வாமனனைப் போற்றுவோம்.

தொடரும்...

# வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ததோபி$_4$வ்ருத்தஸ்ய ச தத்கடாக்ஷை: பிதாऽபி*
*தஸ்யாத்மபு$_4$வோப்த$_3$பூர்த்திம் ।*
*சௌலம் தத$_2$ாऽऽரம்ப$_4$ணமக்ஷராணாம் சகார*
*ஸத்த்வோத்தரபஞ்சமாப்$_3$தே$_3$ ॥* (9)

**திருமலை நம்பியின் கடாக்ஷங்களாலே வளர்ந்த அக்குமாரனுக்கு அப்த பூர்த்தியையும் (சிகை வைத்தலாகிற) சௌளத்தையும், ஸத்த்வகுணம் மிகுந்த ஐந்தாம் வயஸ்ஸில் அக்ஷராப்யாஸத்தையும் தந்தையான கேசவஸோமயாஜி செய்தருளினார்.**



– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

ஸ்ரீமஹாவிஷ்ணுவான ஸ்ரீநிவாசரின் திருவடிகளை பணிந்து வர்ணித்து பாடிய ஸ்தோத்திரங்கள், சமஸ்கிருதத்தில் பல உள்ளன. ஸ்ரீமத்வாச்சாரியார் த்வாதச ஸ்தோத்திரத்தின் முதல் அத்தியாயத்தில் ஸ்வாமியின் திருவடிகளை வர்ணித்துப் பாடியுள்ளார்.

*"சததம் சிந்தயே சந்தம் அந்த காலே விசேஷத:"*

இவ்வாக்கியம் "எப்பொழுதும் ஸ்வாமியை பக்தியுடன் தியானிப்பவர்களுக்கு அவர் தம் முடிவு காலத்தில் நற்பலனை அருள்வார் என்று கூறப்பட்டுள்ளது. ஸ்ரீவிஜயாந்த்ர தீர்த்தரும் ஸ்வாமியின் திருவடிகளைப் புகழ்ந்து ஒவ்வொரு மங்களங்களிலும் பாடியுள்ளார்.

அவ்வாறே விஜயதாசரும் ஸ்வாமியைப் பற்றியும், அவரின் அழகைப் பற்றியும் 15 சரணங்களில் வர்ணித்துப் பாடியுள்ளார்.

*"பஜிசித்ய ஈ பாக்ய நிதியா!...."*

தாமரையின் நடுவே நிவசிப்பவர், பிரம்மன் முதலானவர்களால் துதிக்கப்படுகின்ற திருவடிகளை உடையவர் என்கிறார்.

*"மணிமய கசித கிரீட சந்த்ர - மனசோலி சுவசுலலாட!...."*

ஸ்ரீநிவாசனின் கிரீடம் நவரத்தினமணிகளால் பதிக்கப்பட்டு ஒளிமயமாகக் காட்சி தருபவை. நெற்றியில் கஸ்தூரி நாமத்தை உடையவர். அவரின் கண் பார்வை பக்தர்களின் மேலேயே இருக்கும். காதுகளில் உள்ள குண்டலங்களோ பிரகாசிக்கும் தன்மை கொண்டது. தோள்களோ ஆமையைப் போன்று உடையது.

*"ப்ருங்க குந்தன நீலகேசா! புப்பு! அங்கஜசாப விலாச!..."*

அவரின் கேசமோ கருமையான மின்மினிப் பூச்சிகளைப் போன்றும், கார்புருவங்கள் மன்மதனின் அம்பைப் போன்றும், மூக்கோ செண்பக மலர்களை ஒத்ததாகவும், உதடுகள் இளமையான ரோஜா மலர்களைப் போன்றதாகவும் உள்ளன.

*"பரிமள வீள்ய கற்பூராவிட்ட! கரடிகெ பாயிமதுர வாணி..."*

அவரின் வாய்-மணம் மிக்க பச்சைக் கற்பூரம் போன்ற நறுமணப் பொருட்களின் கலவையுடன் கூடிய தாம்பூலத்தை உட்கொள்ளக்கூடியது. அவரின் தொண்டைக் குரலோ இனிமையாகவும், கம்பீரமாகவும் இருக்கும்.

அவரின் பற்களோ வெண் முத்துக்கள். முகமோ சந்திரனைப் போன்று ஒளி மயமாகக் காட்சி அளிப்பவை.

*"பகுளார விந்த மல்லிகெ குரவக பன்னீரு சம்பிகெ போங்கே!...."*

மகிழம் பூ, மல்லிகை, பன்னீர், செண்பகம், தாழம்பூ, சாமந்தி, சம்பங்கி, ஜாதிப்பூ, சுகந்தரோஜா ஆகிய மலர்களை ஸ்வாமி சூடியுள்ளார் என்று சொல்லப்படுகிறது.



## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலையான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத்துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதைகள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

*"கடக கங்கணமுத்ரெ பெரபாணி! நிடிதோளு ககுத்புஜ கொரள ஸ்கந்தா...."*

ஸ்ரீநிவாசன் திருக்கரங்களில் கடியம், கங்கணம், மோதிரம் ஆகியவற்றை அணிந்துள்ளார். அவரின் தோள்கள், கழுத்து ஆகியவை கம்பீரமாகக் காட்சி தருகின்றன.

அவரின் உடல் முழுவதும் பொன் ஆபரணங்களால் ஜொலிக்கிறது. வக்ஷஸ்தலத்தின் மேலுள்ள முத்து ஆரத்தையும், புனுகு, கேசரி போன்ற சுகந்த திரவியங்களைப் பூசியுள்ள உடலையும், அகில புவனத்தை தரித்த நாபியையும், இடுப்பில் உள்ள அரைஞாண் கயிற்றையும் பற்றி அழகாக வருணித்துப் பாடியுள்ளார்.

*"பாம சசி வர்ண பாத பாப! காவவதஹி சுவபாத காம..."*

ஸ்ரீநிவாசனின் பாதங்கள் சூரிய சந்திரனைப் போன்று பிரகாசிப்பவை. பாவங்களைத் தீர்ப்பவை. திருவடிகளை வணங்குபவர்க்கு காமதேனு, கற்பக மரம் போன்று மிகுந்த ஞானத்தை வழங்குபவை. நாள்தோறும் ஒரு முறையாவது ஸ்வாமியை நீயே கதி என்று வணங்குவாயாக!

*"ஆபத்ரக்ஷக சுராத்யக்ஷ சர்வ! வ்யாபக கருணா கடாக்ஷ ஜாக்ரத்..."*


ஆபத்பாந்தவனாக ஆபத்தில் உள்ள போது தம் கஷ்டங்களை நீக்குபவன், சர்வ பாவங்களை அழிப்பவன், கருணைக்கடல், எந்நேரத்திலும் நம்மைக் காப்பவன், வேண்டும் வரங்களைத் தரும் கற்பக விருக்ஷம் போன்றவன் என்றும், இவ்வாறு பலவிதமான லீலைகளைக் காட்டுகின்ற ஸ்ரீநிவாசனின் திருவடிகளை வணங்குவோம்.

தியானத்தால் அனுபவம், ஞானம், பக்தி ஆகியவை கிட்டும். தியானித்து ஸ்வாமியை பக்தியுடன் வணங்கினால் துன்பங்கள் நீங்கி ஆனந்தம் கிட்டும்.

தெலுங்கு மூலம் : திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 65




**இடமிருந்து வலம் :**

1. திருமங்கையாழ்வார் அவதரித்த தலம்.....(8)
4. எமதர்மனிடம் இருந்து தன் கணவர் உயிரை மீட்டவர் .....(5) சாவித்திரி.
6. கருடனின் மனைவியருள் ஒருவர்.....(5)
14. கிருஷ்ணருக்கு பெயர் சூட்டியவர்.....(7)
18. யாளியின் வாயில் அனுமன் உள்ள தலம்......(6)

**வலமிருந்து இடம் :**

8. ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவர்....(6)
9. குலசேகர ஆழ்வாருக்கு தந்தை இட்ட பெயர்...(6)
10. பெருமாளின் இடது புறம் உள்ளவர்....(4)
13. நம்மாழ்வாரை.....(9)மாறன் என்றும் அழைப்பர்.
15. மனிதன் பாதி சிங்கம் பாதி உருவமுள்ள கடவுள்.....(6)
16. துணைவி லட்சுமியுடன் வைகுண்டத்தில் வசிப்பவர்.....(5)
22. ஸ்ரீரங்கம் ஆலயத்தின் கோபுரம் மற்றும் மதில் சுவர் கட்டுமானப் பணிகளை செய்தவர்....(9)

**மேலிருந்து கீழ் :**

2. தசரதனின் முதல் மனைவி ....(3)
3. தென் துவாரகை என்று அழைக்கப்படும் ஊர்....(9)
4. அம்ரீஷனைக் காக்க மாமுனிவரான துர்வாசனாரை துரத்தியடித்தது....(6)
5. மூலவர் ஓரிடத்திலும் உற்சவர் வேரிடத்திலும் உள்ள நரசிம்மர் தலம்....(5)

**கீழிருந்து மேல் :**

7. வைகாசி மாதம் தேய்பிறை ஏகாதசியின் பெயர்.....(4)
11. பஞ்சாட்சர பாயசம் படைத்து வழிபடும் கேரளாவில் உள்ள ராமசாமி கோயில்....(6)
12. பஞ்ச நாராயணத் தலங்களில் ஒன்று....(5)
17. ஸ்ரீகிருஷ்ணருக்கு ஈடாக துலாபாரத்தில் ருக்மணி இட்ட பொருள்....(6)
18. ஸ்ரீமத் அழகிய சிங்கர் உலகிலேயே மிக உயரமான கோபுரம் கட்டி பெருமாளுக்கு அர்ப்பணித்த க்ஷேத்திரம்....(5)
19. ஆந்திராவில் சூரிய தலம் உள்ள இடம்....(5)
20. குருக்ஷேத்திரம் ......(4) மாநிலத்தில் உள்ளது.
21. 11 திவ்ய தேசங்கள் உள்ள ஒரே ஊர்....(6)


தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார், சென்னை,
81249 30259



புதிருக்கு விடை அறிய
32ம் பக்கம்
பார்க்கவும்...


## தடை விதிக்கப்பட்ட பொருட்கள்

திருமலை ஆலயத்திற்குள் தேங்காய், செல்போன், டிஜிட்டல் கைகடிகாரங்கள் போன்ற மின்னணு பொருட்கள், காலணிகள், வெடிப்பொருட்கள், பிளாஷ்டிக் பொருட்கள் எடுத்து செல்லுதல் கூடாது

ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

# 7 சாரித்ரேண யுக்தன்



- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,
சென்னை.

**நன்னடத்தை உடையவர். தான் சக்ரவர்த்தித் திருமகனாக இருப்பினும் ஒரு சராசரி மனிதனின் சிறு ஒழுக்கத்தைக் கூட தவறாது கடைப்பிடித்தவர்**

## குருவுக்குத் தொண்டு

விச்வாமித்ரர் இராமனையும் லக்ஷ்மணனையும் தான் செய்யவிருந்த யாகத்தைக் காத்துக் கொடுக்க ஸித்தாச்ரமத்திற்கு அழைத்துப் போனார். இருவரும் ஆறு நாட்கள் விழித்திருந்து மாரீசன், ஸுபாஹு முதலான அரக்கர்களை ஓட்டி யாகத்தைக் காத்தனர். பின் விச்வாமித்ரர் "நான் மிதிலா தேசத்திற்குச் செல்கிறேன். நீங்கள் விரும்பினால் நாடு திரும்பலாம்" என்றார்.

ஆனால் இராமன் "எங்கள் தந்தை தங்களுக்குத் தொண்டு புரியவே எம்மை அனுப்பியுள்ளார். இது எங்கள் பாக்யம். தாங்கள் எங்கு சென்றாலும் பின் தொடர்ந்து வந்து தொண்டு புரிவோம்" என்று கை கட்டி நின்றான். இது கண்டு மகிழ்ந்த முனிவர் இருவரையும் கண் குளிர கடாக்ஷித்து மிதிலை நகருக்கு அழைத்துச் சென்றார். அதன் பயனாக சீதா கல்யாணமே நடந்தது. இறைவனே மனிதனாகப் பிறந்து சான்றோர்க்குத் தொண்டு புரியும் அவசியத்தை உணர்த்துகிறார். எனவே மனிதனாகப் பிறந்த நாமும் குருவுக்குத் தொண்டு புரிவோம்.

## இராமனின் கற்பு

இராமன் ஒருவனுக்கு ஒருத்தி எனும் சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தான். "மாற்றான் மனைவியைக் கண்ணாலும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான் இராமன்!" என்று மக்கள் கொண்டாடுவர். இராமனின் புலனடக்கத்தை வாலியின் மனைவியான தாரையே கொண்டாடுகிறாள். நாட்டில் பல மாமியார்களுக்கு நடுவே தன் ஆசைக் கணவனோடு தனிமையில் பேச முடியவில்லை என்று தான் சீதையும் இராமனுடன் காட்டுக்குப் புறப்பட்டாள் போலும்!

இராவணன் ஒருக்கால் சீதையை இராமனோடு சேர்த்துச் சிறையில் அடைத்திருந்தால் இராமன் அதனைச் சிறை வாசமாக எண்ணியிருப்பானா என்பது சந்தேகமே! சீதை மீது அவன் வைத்திருந்த காதல் அத்தனை உயர்ந்தது! சீதை அசோக வனத்தில் சிறைப்பட்டு இருந்த போது அவளைப் பிரிந்த இராமன் உண்ண வில்லை! உறங்க வில்லை! தன் உடம்பில் புழு பூச்சிகள் ஊர்ந்தது கூட அவனுக்குத் தெரியவில்லை என்று அனுமன் சொல்லக் கேட்ட சீதை, உள்ளூரத் தன் கணவனின் காதலை நினைத்துப் பெருமிதம் அடைந்தாள். கற்பெனும் ஒழுக்கம் பெண்களுக்கு மட்டுமல்ல; ஆண்களுக்கும் அவசியமே!

### பித்ரு காரியங்களின் இன்றியமையாமை

இராமன் சித்ரகூடத்தில் இருந்தபோது பரதன் வந்து தந்தை மாண்ட செய்தியைக் கூறினான். அது கேட்ட இராமன் அழுது, அலற்றி உடனே தம்பிகளோடும், மனைவியோடும் மந்தாகிநி ஆற்றங்கரையை அடைந்து, அங்கு காய்களால் பிண்டம் வைத்துத் தர்ப்பணம் செய்தான். கங்கை, யமுனை போன்ற எந்த புண்ய நதியைக் கடந்தாலும் அங்கு தன் தந்தையைக் குறித்துத் தர்ப்பணம் செய்வார் இராமன். கோதாவரிக் கரையில் இராமன் தர்ப்பணம் செய்த இடத்தில் இன்றும் அனைவரும் தர்ப்பணம் செய்கின்றனர். காட்டுக்குப் புறப்பட்ட போதும், பட்டாபிஷேகத்தின் போதும் தவறாமல் நிரம்ப தானங்கள் செய்தான். பட்டாபிஷேகம் முடிந்து பல்லாண்டுகள் கழித்து சீதை பூமியுட் புகுந்து வைகுந்தம் திரும்பினாள். அதற்குப் பின் சீதையின் உருவத்தைத் தங்கத்தால் செய்து அருகில் வைத்துக் கொண்டு இராமன் பல அஸ்வமேத யாகங்கள் செய்தார்.




வேதம் சொல்லியிருக்கும் நற்செயல்களைச் செய்வதே நம் வாழ்க்கைக்கு சாந்தி அளிக்கும்.

### அடியார்க்கு அடியான்

இராமனின் தொண்டன் பரதன்; சத்ருக்நன் பரதனின் தொண்டன். “சத்ருக்நன்” என்று தனக்கு ஒரு தனி அடையாளம் கொள்ளாமல் பரதன் தம்பி என்பதையே பெருமையாகக் கருதியவன் அவன்! பரதன் கேகய தேசத்தில் இருக்கும் தன் மாமன் யுதாஜித்தின் வீட்டுக்கு சத்ருக்நனோடு புறப்படுகிறான். பூச நக்ஷத்ரத்தில் பிறந்த பரதன் புறப்பட வசிஷ்டர் மங்களமான நாளைக் குறித்தார்.

சத்ருக்நனின் ஆயில்ய நக்ஷத்ரத்துக்கு அதே நாள் பொருந்துமா என்று வசிஷ்டர் பார்க்க வில்லை. ஒருவனின் உடைக்கும், உடை வாளுக்கும், நிழலுக்கும் யாரேனும் தனியாக நாள் பார்ப்பார்களா என்ன? பரதனின் உடைவாள் மற்றும் நிழல் போன்ற நெருக்கமான தொண்டன் சத்ருக்நன். அச்சத்தால்கூட ஆண்டவனுக்குத் தொண்டு புரிய பலர் முன் வரலாம். ஆனால், விருப்பமும் சிறந்த ஒழுக்கமும் இணைந்தால் தான் இறையடியவர்க்குத் தொண்டாற்ற இயலும்.



### கண்ணும் காணும் - கிஷ்கிந்தையில்

கிஷ்கிந்தையில் சுக்ரிவன் சீதை போட்டுச் சென்ற ஆபரணங்களை இராமனிடம் காட்டி அடையாளம் காணச் சொல்கிறான். துயரத்தில் இருக்கும் இராமனால் அவற்றை பார்க்க இயலாமல் லக்ஷ்மணனைப் பார்க்கச் சொன்னான். கழுத்தணி, காதணி, வளையல் ஆகிய எதையும் அடையாளம் தெரியாது என்று கூறி வந்த இலக்குவன், இறுதியில்சீதை தனது திருவடியின் கணுக்காலில் அணியும் சிலம்பைக் கண்டபோது, அதனை அடையாளம் காட்டினான். சீதையை தினமும் வணங்கும்போது லக்ஷ்மணனின் கண்கள் அவள் திருவடிகளுக்கு மேலே நோக்காது. இது லக்ஷ்மணனின் கற்பு. ஆண்களின் ஒழுக்கமும் பெண் இனத்துக்குப் பெருமை கூட்டும்.

**கருத்து :** நாம் கல்வியாலோ, செல்வத்தாலோ, பதவியாலோ உயர்ந்தவன் என்ற வீண் எண்ணத்தால் அடிப்படை தர்மங்களை அலட்சியம் செய்யாது, அவற்றைக் கடைப்பிடித்தலே நல்லொழுக்கம்.



வளரும்...

"பெருமாள் கோயில்" என்று அழைக்கப்படும் காஞ்சீ புரத்திற்கு வடமேற்கு திசையில் சுமார் 10 கி.மீ. தூரத்தில் உள்ள "கூரம்" என்கிற அழகிய கிராமத்தில் கலி 4109 ஆம் ஆண்டு "ஸௌம்ய" வருடத்தில் (ஆங்கில 1010ம் ஆண்டு), "தை" மாதம், "ஹஸ்த நட்சத்திரத்தில் இராமாநுஜர் பிறப்பதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தார் நம் கூரத்தாழ்வான்.

இப்பூவுலகத்தில் கர்ம வசத்தால் பிறந்த நம்மையெல்லாம் திருத்தி, தனக்கு கைங்கர்யம் பண்ண வைக்கவும், நல்லோர்களைக் காக்கவும், அறத்தை நிலை நாட்டவும், தீயவர்களை அழிக்கவும் எம்பெருமான் இராமன், கிருஷ்ணன் முதலிய அவதாரங்களை எடுத்தான். எம்பெருமான் இராமனாகவும், பரமபதத்தில் எப்பொழுதும் அவனுக்குக் கைங்கர்யம் பண்ணுபவரான ஆதிசேஷன் லக்ஷ்மணனாகவும்,திரேதா யுகத்தில் அவதரித்தார்.

அந்த சமயத்தில் லக்ஷ்மணன் 14 வருடம் தான் கைப்பிடித்த மனைவியைப் பிரிந்து உண்ணாமலும் உறங்காமலும் இருந்து இராமனுக்குச் சிறந்த தொண்டு செய்தான். லக்ஷ்மணன் பட்ட கஷ்டங்களை நினைத்து தான் அவனுக்கு அடிமையாக இருந்து தொண்டு செய்ய வேண்டும் என்று எம்பெருமானாகவும் ஆதிசேஷனான இளைய பெருமாள் லக்ஷ்மணன் தமையனாகவும், பலராமனாகவும் அவதரித்தார். அப்பொழுது எஜமானனாக பலராமனாகப் பிறந்து, கைங்கர்யம் கொள்வதைக் காட்டிலும் பணியாளனாக கண்ணனாக பிறந்து அடிமை செய்வது மிகவும் சிறந்த அனுபவமாக இருப்பதை எம்பெருமான் உணர்ந்தான். இருப்பினும் பலராமனுக்கு தான் எண்ணியபடி கைங்கர்யம் பண்ண முடியாமல் போயிற்று.

அதனால் மறுபடியும் எம்பெருமான் அடிமை செய்பவனாகவே இருக்க நினைத்தான். அதன்படி, கலியுகத்தில் அடிமை செய்ய எம்பெருமானே கூரத்தாழ்வானாகவும், அடிமை கொள்ள ஆதிசேஷன் எம்பெருமானாராக அவதரித்தார்கள் என்று கூறுவர் பெரியோர். எப்படி எம்பெருமானின் திருமார்பில் ஒரு மறு (மச்சம்) உள்ளதோ, அதே போல் ஸ்ரீகூரத்தாழ்வானின் திருமார்பிலும் ஒரு மறு இருந்துள்ளது பிரசித்த

# ஸ்ரீகூரத்தாழ்வான்

திருமதி பிரேமா வரதன்,
புதுதில்லி,
9899713565.



## கண்ணன் கருத்துரை



*யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத ।*
*அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥*

(4-7)

**எவ்வப்போது தருமத்துக்குக் கேடுண்டாகி அதர்மம் தலை எடுக்கிறதோ அவ்வப்போது நான் ஏதோ ஒரு அவதாரத்தை மேற்கொள்கிறேன்.**

தொகுப்பு : பேராசிரியர்
அமரர் பொன் சௌரிராஜன்,
திருப்பதி.



மாகையால் அவருக்கு எம்பெருமான் திருநாமமான "ஸ்ரீவத்ஸ சிஹ்நர்" "திருமறுமார்பன்" என்று கூரத்தாழ்வானின் தகப்பனார் பெயர் சூட்டினார்.

### ஆழ்வான் என்ற திருநாமம் :

சிறு வயதிலேயே வேதம், இதிகாச புராணங்கள், ஆழ்வார்களின் பாசுரங்களாகிய திவ்ய பிரபந்தங்கள் இவை அனைத்தையும் கற்றுத் தேர்ந்த கூரத்தாழ்வான் தமது ஆசார்யரான இராமாநுஜர் கட்டளைப்படி முதலியாண்டான் போன்றவர்களுக்கு திருவாய்மொழியின் பொருளைக் கூறிக் கொண்டு இருந்தபோது, உயர்வறவுயர் நலமுடையவன் என்ற பாசுரத்தை ஆரம்பிக்கும் போதே, எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களில் ஆழ்ந்து மயங்கி விழுந்து விட, சீடர்கள் அனைவரும் உடனே எம்பெருமானாரிடம் ஓடி வந்து விஷயத்தைக் கூற, அவரும் ஓடி வந்து பார்த்து, சீடர்களிடம் நம்மாழ்வார் திருவாய்மொழி அருளிச் செய்யும்போது *"எத்திறமுரலினொடிணைந்திருந்தேங்கிய எளிவே"* (திருவாய்மொழி 1–3–1) என்று ஆறு மாதம் மயங்கிக் கிடந்தார்.

நமக்கு அதைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்க வில்லை. இன்று, அதே நம்மாழ்வாரைப் போல் இவர் மயங்கிக் கிடப்பதைக் கண்ணாரக் காணும் பாக்கியம் பெற்றோமே என்று குரல் தழுதழுக்கப் பேசினார். இது வரையில் கூரத்தாழ்வானுக்கு "ஸ்ரீவத்ஸாங்கர்" என்ற பெயர் தான் இருந்து வந்தது. நம்மாழ்வாரைப் போல் உருக்கத்திலே ஆழ்ந்து இருந்ததால் இராமாநுஜர் இவரை "ஆழ்வான்" என்று அழைத்ததால், அன்று முதலாக இவருக்கு ஆழ்வான் என்ற திருநாமம் ஏற்பட்டது. மேலும், இவர் அவதரித்த இடம் கூரம் என்பதால் இவருக்கு கூரத்தாழ்வான் என்ற பெயர் ஏற்பட்டது.

### கூரத்தாழ்வான் கடைபிடித்த பிரம்மச்சரிய விரதம் :

ஆழ்வான் அவதரித்த கூரம் என்கிற இடம் பழங்காலத்தில் கூரமாநகர் என்று பிரசித்தி பெற்ற ராஜ்யமாக இருந்தது. அதில் இவர் தாமே அரசாட்சி செய்து வந்தார். ஒரு நாளிரவு நகர்வலம் வந்த போது, ஒரு வீட்டில் கதவை தாளிட்டு சிலர் பேசிக் கொண்டு இருந்ததை அவர்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து சமாசாரம் தெரிந்து கொண்டார்.

அதாவது, அந்த வீட்டுத் தலைவர், பெண்ணின் ஜாதகப்படி அவளை மணம் புரிபவர், திருமணம் ஆன சிறிது காலத்திலேயே இறந்து விடுவான் என்றும், இதை அறிந்த யாரும் அவளை மணக்க முன் வராததால், வயதிற்கு வந்த பெண்ணை வீட்டில் வைத்திருப்பதை விட அவளைக் கொன்று விடுவதே மேல் என்ற வார்த்தைக் கேட்ட ஆழ்வான் திடுக்கிட்டுப் போய், மறுநாள் ராஜ சபைக்கு அப்பெண்ணின் தந்தையையும் உறவினரையும் வரவழைத்து குடி மக்களின் வருத்தத்தைத் தீர்ப்பது அரசரின் கடமை. ஆதலால், உங்கள் பெண்ணை நான் மணந்து கொள்கிறேன். கவலையை விடுங்கள் என்று அறுதியிட்டார்.

பெண்ணின் பெற்றோர் ஆழ்வானை (ராஜாவை) இழக்க விரும்பவில்லை. மறுத்தனர். அப்போது ஆழ்வான் வைராக்யமாக ஒரு வார்த்தை

சொன்னார். நான் சிற்றின்பத்தை விரும்பினாலன்றோ தீங்கு விளையும்.

எனக்கு அதில் எள்ளவும் விருப்பமில்லை. விவாகத்திற்கு இரண்டு பலன்கள் உண்டு. அவையாவன, தர்மத்தை நிலை நாட்டுவதும், குழந்தைச் செல்வங்கள் பெற்றுக் கொள்வதும் ஆகும். நான் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக மணந்து கொள்கிறேன் என்று சொல்லி அந்தப் பெண்ணை மணந்து கொண்டார்.

இதனால் ஆழ்வானின் கீழ்க்கண்ட நல்ல குணங்கள் வெளிப்படுகின்றன. 1) ராஜாவாக இருப்பவன் குடி மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். 2) சிற்றின்பத்தில் பற்று இல்லாமை. 3)சாதாரண குடும்ப விருத்தியைக் காட்டிலும் விசேஷ தர்மமான தர்மானுஷ்டனமும் முக்கியம். 4)ஜீவஹிம்ஸை (உயிர்களை வதைத்தல்) தவிர்த்தல். ஆழ்வானின் மனைவியின் பெயர் ஆண்டாள். ஆழ்வானைக் காட்டிலும் எல்லா விதங்களிலும் இவ்வம்மையார் மேம்பட்டவர். திவ்ய தம்பதிகள்.

**ஆழ்வானுடைய ஜீவகாருண்யம்:**

கருணைவள்ளலான கூரத்தாழ்வான் துளசியான நாலூரானும் நற்கதி பெற வேண்டும் என்று விரும்பினார். நாலூரானால் கண் பார்வை இழந்த ஆழ்வான் காஞ்சீ வரதராஜனிடம் வரதனே! இராமாநுஜர் அருளினால் நான் மோக்ஷமடைவது உறுதி. ஐயோ பாவம். நாலூரான் அவனுக்கு மோக்ஷம் தாரும் என்ற வரத்தை கேட்டாராம்.

பாவியான நாலூரானுக்கா நற்கதி விரும்பினீர்? என்று யாவரும் வியந்து போக, பாவம் செய்தவர்களுக்குத்தான் நாம் இரங்க வேண்டும். நீரிலேயே... மீனுக்குத் தண்ணீர் கொடுப்பதால் என்ன பயன்?' என்றாராம். இப்படிப்பட்ட தயை கூரத்தாழ்வானுக்கே உரியது. அதுமட்டுமா? எல்லா உயிர்களுக்காகவே இரங்கியவர் ஆழ்வான். ஒரு நாள் ஒரு தவளை ஒரு

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

***யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?***

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

***பெரியோர்கள் செய்ய வேண்டியன...***

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

***நிபந்தனைகள் :***

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



குழந்தைகளே எழுதுங்கள்!
கோவிந்தன் திருவருளை
பெறுங்கள்!!

**பண்பாட்டு ஆடை**

- திருமலையானின் வி.ஜ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்-சுடிதார்.

பாம்பின் வாயில் அகப்பட்டு வலி தாங்காமல் கதறிக் கூக்குரலிட, அதைக் கண்ட ஆழ்வான்,

ஐயனே! இது யாரைக் காப்பாளர் என்று நினைத்துக் கூப்பிடுகிறதோ? என்று மூர்ச்சித்தாராம். மற்றொரு நாள் ஆழ்வான் தோட்டத்து வழியாகச் சென்று கொண்டிருந்த போது ஒருவன் ஒரு வாழைக் குருத்தை அறுத்துக் கொண்டிருக்க, அறுத்த இடத்திலிருந்து பால் வடிவதைக் கண்டு ஆழ்வான் மயங்கி விழுந்தார். பின்னும் ஒரு நாள், திருக் காவேரியில் தண்ணீர்க் குடத்தை இடுப்பிலே எடுத்து வைத்து உதவி செய்ய ஆள் இல்லாமல் ஒரு கர்ப்பிணிப் பெண் திண்டாட அப்பெண்ணுக்குத் தண்ணீர் குடம் எடுத்து வைத்து உதவினார். இது போல் மற்றும் பல.

**ஆழ்வானின் ஆசார்ய பக்தி :**

ஒரு நாள் இராமாநுஜர் ஓர் ஊமையை மடத்திற்கு அழைத்து வந்து கதவுகளை சாத்தி, ஊமையிடம் செய்கையாலே தன்னுடைய திருவடிகளைக் காட்டிக் கொடுத்தார். அவரும் இத்திருவடிகளை நமக்குத் தஞ்சம் என்று உணர்ந்து இராமாநுஜரின் திருவடிகளைத் தன்னுடைய தலைமேல் வைத்துக் கொண்டார். இதையே கதவு துவாரத்தின் வழியாக ஆழ்வான் பார்த்து "ஐயோ! ஆழ்வானாகப் பிறந்து சாஸ்த்திரங்களைக் கற்று அழிந்து விட்டேனே! ஒரு ஊமையாகப் பிறந்திருந்தால் இராமாநுஜரின் திருவடிகளைத் தலை மேல் வைத்துக் கொள்ளும் பாக்கியம் கிடைத்திருக்குமே! ஆழ்வானாகப் பிறந்து அப்பேரை இழந்தேனே" என்று புலம்பினார்.

ஆசார்யனின் திருவடியைத் தவிர மற்றொன்று உண்டு என்பதையே அறியாதவர் ஸ்வாமி கூரத்தாழ்வான். தம் ஆசார்யன் இராமாநுஜரை விண்ணுலகில் வரவேற்க, இம்மண்ணுலகை விட்டு நீங்க அரங்கனிடம் வரம் பெற்ற ஆழ்வானை குரு பக்தியில் யாரால் விஞ்ச முடியும்? ஒரு முறை திருவரங்கத்தில் நம்பெருமாளை சேவிக்க கோயிலுக்கு வந்த ஆழ்வானை வாயில் காப்போன் உள்ளே விட மறுக்க, வேறொருவன் இவர் இராமாநுஜரின் சம்பந்தமுடையவராக இருந்தாலும் ஆத்ம குணங்கள் நிறைந்த நல்லவன். அதனால் உள்ளே விடு என்று கூற, எனக்கு இராமாநுஜரைத் தவிர வேறு எதுவும் வேண்டாம். அவருடைய சம்பந்தமில்லாத பெருமாள் சேவை தேவையில்லை என்று வெளியேறி விட்டார். என்னே குருபக்தி!

ஆசார்யனிடம் சரமஸ்லோக அர்த்தத்தை ஒரு வருட காலம் அவரிடம் தொண்டுபூண்டு கற்க வேண்டும் என்றறிந்த கூரத்தாழ்வான், இந்த உடல் நிலையற்றது. ஒரு வருடம் தரிக்க முடியாது. அதற்கு பதில் ஆசார்யன் திருமாளிகை வாசலில் ஒரு மாத காலம் பட்டினி கிடந்தால் அதுவே ஒரு வருட காலம் ஆசார்யனுக்கு அடிமை செய்வதற்குச் சமம் என்றறிந்த ஆழ்வான், அதன்படி ஒரு மாத காலம் இராமாநுஜரின் திருமாளிகை வாசலில் பட்டினி கிடந்து அந்த உயர்ந்த பொருளை இராமாநுஜரிடம் பெற்றார்.

ஆழ்வானின் திருக்குமாரர்கள் எம்பாரின் சிஷ்யர்களாக இருந்ததும், திருமந்த்ர அர்த்தம் மிகவும் முக்கியம். ஆதலால், அடுத்த நிமிடம் நம் கையில் இல்லை என்றறிந்த ஆழ்வான் தானே, அக்குமாரர்களுக்கு திருமந்திரம் அருளிச் செய்தார். ஒன்றும் நன்றே செய்க, நன்றும் இன்றே செய்க! என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கினார் ஆழ்வான்.

போதாயன வ்ருத்தி க்ரந்தத்தை இழந்த இராமாநுஜருக்குத் தம்முடைய ஞான சக்தியினாலும் மேதாவிலாசத்தாலும் மீட்டுத் தந்த கூரத்தாழ்வானுக்கு நிகருண்டோ! கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு மற்றும் குலச்செருக்கு ஆகிய முக்குறும்பு என்கிற படுகுழியைக் கடந்தவர் ஆழ்வான்!

மொழியைக் கடக்கும் பெரும் புகழான் வஞ்சமுக் குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் அடி பணிந்து உய்வோமாக!

# வாஸ்து சாஸ்திரம்

முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
9444392595

இந்த உலகத்தில் பஞ்ச பூதங்களின் ஆளுமையைப் பற்றி உங்களுக்கு சொல்லத் தேவையில்லை. அப்படிப்பட்ட இவைகள் நம் வீட்டின் உள்ளும் தன் ஆளுமையை நீட்டிக்கிறது. அதனால் தான் ஒருவனுக்கு தான் வசிக்கும் வீடு மிகவும் முக்கியமானதாக அமைகிறது. வீட்டில் அமைதி நிலவி செல்வம் பெருக நேர்மறை சக்திகள் குடியிருக்க வேண்டும்.

இன்றுள்ள சிக்கலான சூழ்நிலையில், உடல் ஆரோக்கியம், சொத்து மற்றும் சொந்த பந்தங்களுடன் ஏற்படும் பிரச்சனைகளுக்கான காரணிகளை ஆராயக் கூட நமக்கு நேரம் கிடைப்பதில்லை. பெரும்பாலான இந்த பிரச்சனைக்கு வாஸ்து சாஸ்திரம் மற்றும் ஃபெங்சூயிக்கும்(நீர் காற்று) தொடர்பு உள்ளது. ஆகவே சில கட்டளைகளை பின்பற்றினால் வீட்டிலுள்ள நேர்மறை சக்தி கூடும். மேலும் வாஸ்து மற்றும் ஃபெங்சூயி வல்லுநர்களிடம் இருந்து பெறப்பட்ட சில வழிமுறைகளை பயன்படுத்தினால் வாழ்க்கை இனிமையாக அமையும். அத்தகைய வழிமுறைகளை உங்களுக்காக கொடுத்துள்ளோம். அதைப் படித்து பின்பற்றி பாருங்கள்.

## வாஸ்து முறையில் பணக்காரராக சில இரகசியங்கள்

வாஸ்து என்பது மிகவும் அற்புதமான ஒரு சாஸ்திரம். இதை சரியான முறையில் பின்பற்றினால் நீங்கள் வாழ்வில் உயர்ந்து கொண்டே போகலாம். ஆனால், அதில் தவறு ஏற்பட்டால் நீங்கள் அதள பாதாளத்தில் விழுந்து விடுவீர்கள் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

உங்கள் கையில் அடிக்கடி பணம் வந்து கொண்டிருக்க வேண்டுமானால் நீங்கள் தூங்கும் போது மேற்குப் பக்கம் தலை வைத்துப் படுக்க வேண்டும். அதாவது நீங்கள் தூங்கும் போது உங்கள் தலை மேற்குப் பக்கமாக இருக்க வேண்டும். சூரியன் உதிக்கும் பக்கத்திற்கு எதிர்ப்பக்கமாக இருப்பது மேற்கு பக்கம். இந்த பக்கம் தலை வைக்கும் விதத்தில் உங்கள் கட்டிலை திருப்பி வைத்துக் கொள்ளுங்கள். எவ்வளவுதான் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும் அதற்கு ஏற்ற விதத்தில் பணம் கிடைக்காமல் வேதனைப் பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு





இந்த முறை நிறையவே பயன் தரும். எக்காரணம் கொண்டும் வடக்குப் பக்கம் தலை வைத்துப் படுத்தால் நீங்கள் சோம்பேறிகளாகி விடுவீர்கள்.

பணம் அதிகமாக கைமாறும் காரியம் ஒன்றில் நீங்கள் கலந்து கொள்ளச் செல்லும் போது அதாவது காணி விற்றல், வீடு கட்டல் போன்றவற்றிற்கு சிகப்பு அல்லது இளம் சாம்பல் நிற உடைகளை அணிந்து செல்லவும். உடைகள் இல்லை என்றால் இந்த நிறத்தில் கைக்குட்டை ஒன்றையாவது எடுத்துச் செல்லவும். இதனால் சில அதிசயங் களும் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

உங்கள் வீட்டில் உள்ள குழாய்களில் அடிக்கடி தண்ணீர் ஒழுகிக் கொண்டு இருக்கிறதா என்பதில் கவனமாக இருங்கள். சில வீடுகளில் உள்ள பைப்புகளில் பார்த் தால் சொட்டுச் சொட்டாக தண்ணீர் ஒழுகிக் கொண்டே இருக்கும். இப்படி நடப்பதனால் அந்த வீட்டில் செலவு அதிகமாகவே இருக் கும். இதேபோல், வீட்டினுள் எந்தப் பகுதியி லும் ஈரத்தன்மை இல்லாமலும், பூசணம் பிடிக் காமலும் வைத்திருப்பதில் கவனமாக இருங்கள்.

உங்கள் வீட்டில் உள்ள கிழக்குப் பகுதியில் எந்த இடத்திலாவது சில்லறை காசுகள் போட்ட பானை ஒன்றை வையுங்கள். இதற்காக சிறுவர்கள் கூட்டாஞ்சோறு ஆக்கும் பானை ஒன்றை நீங்கள் பயன்படுத்துவதுதான் சிறப்பு.




இந்த பானை நிறைய மாற்றப்பட்ட சில்லறைக் காசுகளைப் போட்டு அதன் வாயை மூடாமல் கிழக்கு பக்கத்தின் ஒரு பகுதியில் வையுங்கள். முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால் இப்படி ஒரு பானை அந்தப் பகுதியில் இருப்பது எவருக்கும் தெரியக் கூடாது. அதாவது, யாருடைய பார்வையிலும் படாத ஓர் இடத்தில் தான் இந்தப் பானையை வைக்க வேண்டும். சாதாரண அறைகளில் குடியிருப்பவர்கள் கிழக்கு பக்கத்தில் உள்ள ஓர் இடத்தில் இந்தப் பானையை வைக்கலாம். இப்படி செய்வதன் மூலம் உங்களுக்கு மேலதிகமாக பணம் வந்து சேருவதை நீங்கள் அனுபவ ரீதியாக பார்த்துக் கொள்ளலாம்.

உங்களது சாப்பாட்டு அறையில் பிரேம் போட்ட வட்ட வடிவமான கண்ணாடி ஒன்றை மாட்டி வையுங்கள். இதிலும் முக்கியமான ஒன்றினை நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது சாப்பாட்டு அறை சுவற்றில் மாட்டப் படும் அந்தக் கண் ணாடியில் மேசை மீதுள்ள உணவு வகைகள் தெரிய வேண்டும். இப்படி செய்வதன் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பணம் இரண்டு மடங்காக அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படும்.



உங்கள் வீட்டிற்குள் தென்கிழக்குப் பகுதி எது என் பதைக் கண்டுபிடித்து அந்தப் பகுதியில் ஒன்பது மீன்கள் கொண்ட மீன் தொட்டி ஒன்றை வையுங்கள். இதிலும் முக்கியமான ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதாவது தொட்டியில் இருக்கும் மீன்களின் எண்ணிக்கை ஒன்பதாகத்தான் இருக்க வேண்டும். அதில் எட்டு மீன்கள் கோல்ட்பிஷ் என்று சொல்லப்படும் மீன்களும் (சிவப்பு அல்லது பொன்நிறம்), ஒரு மீன் கருப்பு நிறத்திலும் இருக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் பணமும் அதிர்ஷ்டமும் உங்களை நோக்கி பாசக்கரம் நீட்டும்.




| | | |
|---|---|---|
| கிழக்கு | – | குடிநீர் ஆதாரம் |
| தென்கிழக்கு | – | சமையலறை |
| தெற்கு | – | இரண்டாவது சந்ததியர் புழங்கும் படிப்பறை மற்றும் படுக்கையறை |
| மேற்கு | – | சந்ததியர் படுக்கை அறை |
| வடமேற்கு | – | கழிவறை |
| வடக்கு | – | குபேரனது திசை என்பதால் சுத்தமாக வைத்துக் கொள்ளும் படியாக அமைக்கவும். |
| வடகிழக்கு | – | இது நேரடியான குடிநீர் ஆதாரம் தருவதாகும். |

**வாஸ்து பொதுவான குறிப்புகள் :**

குறிப்பிட்ட விளக்கங்களுடன் மனையில் உள்ள அறைகள் கீழ்க்கண்டவாறு உள்கூடு அளவுகள் அமைத்து நீள அகலங்கள் சிறப்பாக செயல்பட வேண்டியுள்ளது. கடவுள் அருள் கிடைக்கும். வீட்டில் சுபிட்சம் பொங்கும். செல்வமும், போகமும் தேடி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும், நிறைந்திருக்கும்.

6 அடி பலன் – நன்மை ஏற்படும். 7 அடி பலன் – தரித்திரம் பிடுங்கி தின்னும். 8 அடி பலன் – வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றங்கள் உண்டாகும். உயர்ந்த பதவிகள் கிட்டும். பொருளாதார நிலை மிக வேகமாக உயர்ந்து விடும். தெய்வ அருள் உண்டு. 9அடி பலன் – துன்பம், துயரம். 10 அடி பலன் – பொருளாதார நிலையில் சரிவு என்பதே ஏற்படாது. செல்வநிலை மேலும் உயர்ந்து கொண்டே போகும். எதிர்பாராத வகையில் பொருள் வரவு ஏற்படும். திடீர் யோகம் உண்டு.

11 அடி பலன் எந்த காரியத்திலும் தோல்வி என்பதே ஏற்படாது. வெற்றிக்கு மேல் வெற்றியாகக் குவியும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். செல்வ நிலை உயரும். 12 அடி பலன் – துயரம் புத்திரசோகம். 13 அடி பலன் – துன்பம் நோயினால் அவதி, 14 அடி பலன் பொருள் இழப்பு, கவலை, 15 அடி பலன் – துன்பம், துயரம். 16 அடி பலன் – சமுதாயத்தில் தனிப்பட்ட செல்வாக்கு உண்டாகும். பொருளாதார நிலை மிக வேகமாக உயரும். பலவகையான பொருள்கள் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். 17 அடி பலன் – தொழில் அல்லது வியாபாரத்தில் நிறைந்த வருமானம் கிடைக்கும். எதிரிகளை எளிதாக வீழ்த்த முடியும். எந்த காரியத்திலும் வெற்றி காணலாம். 18 அடி பலன் – கைப்பொருள் இழப்பு, வீடு அழியும். 19 அடி பலன் – புத்திர பாக்கியம் கிடையாது. வறுமை உண்டு. 20 அடி பலன் – பண்ணைத் தொழிலில் சிறப்பான லாபம் கிடைக்கும். பல வகைகளிலும் வருமானம் பெருகும். உல்லாசமான வாழ்க்கை அமையும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

21 அடி பலன் – வாழ்க்கையில் தோல்வி என்பதே ஏற்படாது. எல்லா முயற்சிகளிலும் வெற்றியே கிடைக்கும். பொருளாதார நிலை மிகச் சிறப்பாக இருக்கும். பொன்னும் பொருளும் சேரும். 22 அடி பலன் – மனதில் தைரிய உணர்வு மேலோங்கி இருக்கும். எதிரிகளின் சதித் திட்டங்களை எளிதாக முறியடிக்க முடியும். வீண் பழிகள் வேகமாக அகலும்.

தொடரும்...



## ஜனவரி 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

## பிப்ரவரி 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | | | | | |

## மார்ச் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |



### ஜனவரி 2022

01 ஆங்கில வருட பிறப்பு
07-13 ஆண்டாள் நீராட்டோத்ஸவம்
13 வைகுண்ட ஏகாதசி, போகி
14 ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி
மகர சங்கராந்தி-பொங்கல்
15 மாட்டுப்பொங்கல்,
16 ஆண்டாள் பரிணயோத்ஸவம்
17 ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி
26 இந்தியக் குடியரசு தினம்

### பிப்ரவரி 2022

01 ஸ்ரீபுரந்தரதாசர் ஆராதனை
02-10 தேவுனிகடப ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர
ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
08 இரத சப்தமி, பீஷ்மாஷ்டமி, 12 பீஷ்ம ஏகாதசி
10-16 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
தெப்போத்ஸவம்
20-28 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர
ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
22-மார்.03 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### மார்ச் 2022

01 மஹாசிவராத்ரி
10-18 தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
13-17 திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்
18 ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, தும்புரு தீர்த்த முக்கோட்டி
29 அன்னமய்யா நினைவு தினம்
30-ஏப்.7 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்



## ஏப்ரல் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## மே 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## ஜூன் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### ஏப்ரல் 2022

02 தெலுங்கு வருட பிறப்பு (ஸ்ரீசுபக்ருத் நாமம்)
03 ஸ்ரீமத்ஸ்ய ஜெயந்தி
06–14 வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
10 ஸ்ரீராமநவமி
10–18 ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
14 தமிழ் வருட பிறப்பு
14–16 திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்
16–24 நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### மே 2022

03 பரசுராம ஜெயந்தி, அக்ஷய திருதியை
05 இராமாநுஜ ஜெயந்தி, 06 சங்கர ஜெயந்தி
10–12திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம்
13–21ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
14–17திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்
14 ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, 15 தரிகொண்ட வெங்கமாம்ப ஜெயந்தி, ஸ்ரீகூர்ம ஜெயந்தி,16 அன்னமய்யா ஜெயந்தி
17 திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா
23–31கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 25 ஹனுமத் ஜெயந்தி

### ஜூன் 2022

05-13 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
10-18 அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
10-14 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்
12 ஸ்ரீநம்மாழ்வார் சாத்துமுறை
12-14 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
20-22 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்

## ஜூலை 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## ஆகஸ்ட் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## செப்டம்பர் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |



### ஜூலை 2022

03-05 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார மஹோத்ஸவம்
9-11 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
9-12 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
13 ஆஷாட பௌர்ணமி,வியாச ஜெயந்தி, குருபௌர்ணமி
17 திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்
29 ஸ்ரீசக்ரத்தாழ்வார் திருநட்சத்திரம்

### ஆகஸ்ட் 2022

01 ஆண்டாள் திருவாடிப்பூரம், நாகசதுர்த்தி
02 கருட பஞ்சமி, 05 வரலக்ஷ்மி விரதம்
06 மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நினைவு தினம்
07-10 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
11 ஸ்ரீவிகனச ஜெயந்தி 12 ஹயக்ரீவ ஜெயந்தி
13 காயத்ரி ஜபம், 15 இந்திய சுதந்திர தினம்
19 ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமி, கோகுலாஷ்டமி
29 ஸ்ரீபலராம ஜெயந்தி
30 ஸ்ரீவராஹ ஜெயந்தி, 31 விநாயக சதுர்த்தி

### செப்டம்பர் 2022

05-08 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
07 ஸ்ரீவாமன ஜெயந்தி
7-10 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்
09 அனந்த பத்மநாப ஸ்வாமி விரதம்
26-அ.05 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் நவராத்ரி உத்ஸவம்
27-அக்.05 திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## அக்டோபர் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

## நவம்பர் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

## டிசம்பர் 2022

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### அக்டோபர் 2022

01 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
02 சரஸ்வதி பூஜை, காந்தி ஜெயந்தி
03 துர்காஷ்டமி
04 மஹாநவமி
05 விஜய தசமி
24 நரக சதுர்தசி, தீபாவளி அமாவாசை
25 ஸ்ரீகேதார கௌரி விரதம்
29 நாகுல சதுர்த்தி

### நவம்பர் 2022

01 திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம்
05 கைசிக துவாதசி
20-28 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்
21 ஸ்ரீதன்வந்தரி ஜெயந்தி
28 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம்
29 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்ப யாகம்

### டிசம்பர் 2022

04 ஸ்ரீகீதா ஜெயந்தி
05 ஸ்ரீசக்ர தீர்த்த முக்கோட்டி
06 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கார்த்திகை தீபோத்ஸவம்
07 ஸ்ரீதத்த ஜெயந்தி
17 மார்கழி மாதம் ஆரம்பம்
21 ஸ்ரீஅனுமத் விரதம்
22 தொண்டரடிப்பொடியாழ்வார் திருநட்சத்திரம்





# திருமலையில் திருவத்யயனோத்ஸவம்



– கீர்த்திமூர்த்தி
உ.வே. டி.ஏ.கே. ஸ்வாமி,
திருப்பதி.

திருமலையில் திருவத்யயனோத்ஸவம் 23 நாட்கள் நடைபெறுகின்றது. வைகுண்ட ஏகாதசிக்கு முன்பு வரும் அமாவாசையன்றிரவு தோமால ஸேவையாகி அமுது செய்தவுடன் திருமலையப்பன் உபயநாச்சிமார்களுடன் புறப்பட்டுத் திருமாமணி மண்டபம் சேர்ந்து கிழக்கு முகமாக திவ்ய ஸிம்ஹா சனத்தில் வீற்றிருப்பார். நம்மாழ்வார் திருமேனி திருமலையில் இல்லாத குறை ஒருவாறு தீர அவ ருக்கு ஆசார்யரான ஸ்ரீஸேநாபதியாழ்வான் ஸிம்ஹாஸனத்தின் கீழே பக்கத்தில் தெற்குமுகமாக வீற்றிருப்பார். மண்டபத்தின் கீழே எம்பெருமானார் தெற்கு முகமாகவே எழுந்தருளியிருப்பார்.

தளிகை கண்டருளியவுடன் ஜீயர் ஸ்வாமிகளும் அத்யாபகர்களும் இயற்பாவில் முதல் முதலாக திருவந்தாதி முதலாகத் திருவிருத்தம் ஈறாக உள்ள ப்ரபந்தங்களில் முதற்பாட்டும் சாத்துப்பாட்டுக் களும் ஸேவித்துத் தொடங்குவார்கள். மறுநாள், அதாவது பகற்பத்தில் முதல்நாள் காலை இயற்பா முழுவதும் ஸேவிப்பார்கள். அன்றிரவு திருப் பல்லாண்டும் "வண்ணமாடங்கள்" பதிகமும் தொடங்குவார்கள். இரண்டாம்நாள் காலை பெரியாழ்வார் திருமொழியில் முதலிரண்டு பத்துக்கள். இரவு "சென்னியோங்கு" தொடக்கம்.

மூன்றாம்நாள் காலை பெரியாழ்வார் திருமொழி முடிவுபெறும். இரவு விண்ணீலமேலாப்பு தொடக்கம். நான்காம் நாள் காலை திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும், இரவு ஊனேறுசெல்வத்து தொடக்கம். ஐந்தாம்நாள் காலை பெருமாள் திருமொழி முதல் கண்ணிநுண் சிறுத்தாம்பு முடிய ஸேவை. இரவு பெரிய திருமொழியில் வாடினேன் வாடி , தாயே தந்தை தொடக்கம். ஆறாம்நாள் காலை திருமொழியில் முதலிரண்டு பத்துக்கள். இரவு வாட மருதிடை தொடக்கம். ஏழாம் நாள் காலை மூன்று நான்கு பத்துக்கள். இரவு பண்டை நான்மறையும் தொடக்கம். எட்டாம்நாள் காலை ஐந்து, ஆறு, ஏழு பத்துக்கள். இரவு தெள்ளியீர் தொடக்கம். ஒன்பதாவது நாள் காலை எட்டு ஒன்பது பத்துக்கள். இரவு காதிற்கடிப்புத் தொடக்கம். பத்தாம்நாள் காலை பத்து பதினொன்று பத்துக்கள். இரவு திருக்குறுந்தாண்டகமும் திருநெடுந் தாண்டகமும் ஸேவித்து, பெரியாழ்வார் திருமொழி, பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம் இவற்றை சாத்துவார்கள்.

அதன் மறுநாள் அதாவது இராப்பத்து முதல் நாள் தொடங்கி இரவில் திருப்பல்லாண்டு ஆரம்பி த்து திருவாய்மொழியில் முறையே ஒவ்வொரு பத்தாக ஸேவித்து பத்தாம்நாள் நள்ளிரவு திருவாய்மொழி சாத்துமுறை செய்யப்படும். அதன் மறுநாளிரவு கண்ணிநுண்சிறுத்தாம்பு தனியாக ஸேவிக்கப்படும். அதற்கு மறுநாள் இரவு இராமாநுச நூற்றந்தாதி, உபதேச ரத்னமாலை ஸேவையாகிச் சாத்துமுறையில் இயற்சாத்து, வாழித் திருநாமம் ஸேவிக்க அத்யயனோத்ஸவம் முடிவுபெறும். ஆக திருமலையப்பனுக்கு திருவத்யயனோத்ஸவம் 23

நாட்கள் அதன் மறுநாள் வராகப் பெருமாளுக்கு கோயில் திருவாய் மொழியுடன் அத்யயனோத்ஸவம் நடை பெறும்.


பகற்பத்து சாத்துமுறையன்றும், இராப்பத்து சாத்துமுறையன்றும் இராமாநுச நூற்றந்தாதி சாத்து முறையன்றும் சாத்துமுறை முடிவு பெற்றவுடன் எம்பெருமானார் புறப்பட்டு ப்ரதக்ஷிணமாக மூலவர் ஸந்நதிக்கு எழுந்தருளிக் கருட மண்டபத்தில் த்வார பாலகர்களிடம் எழுந்தருளியிருப்பார். அர்ச்சகர் மூலவரிடமிருந்து பரிவட்டம், மாலை, சேஷ வஸ்திரம் இவற்றைக் கொணர்ந்து எம்பெருமானாருக்கு அணிவித்து ஸ்ரீசடகோபன் சாதிப்பார். பிறகு ஜீயர் ஸ்வாமி முதலியோர் உடையவர் அனுஸந்திப்பாக குன்ற மேந்தி, அகலகில்லேன், ஒழிவில்காலம், பல்லாண்டு, அடியோமோடும் என்ற பாட்டுக்களையும் கத்யத்தில் ஓம் பகவத் நாராயணா என்று தொடங்கும் முதல் சூர்ணையும் ஸேவிப்பார்கள். முன்னும் பின்னும் தனியனும் வாழியும் முறையே உண்டு. கோஷ்டிக்கும் ஸ்ரீசடகோபன் ஸாதிப்பது உண்டு.

பகற்பத்து சாத்துமுறையன்று குன்றமேந்தி முதலிய பாசுரங்களின் ஸ்தானத்தில் தாயே தந்தையென்றும்

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 65க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | கு | றை | ய | லூ | ர் | னி | | 2 கோ | 3 தி |
| | 4 ச | த் | ய | வா | ன் | | யூ | தி | | ச | ரு |
| 5 சோ | க் | டு | 6 சு | கீ | ர் | த் | தி | ரு | | லை | க் |
| ளி | ரா | கா | | | மா | தா | த் | 7 வ | ஸ் | 8 அ | கா |
| ங் | யு | க் | ன் | ர | க | சே | ல | 9 கு | ம் | | வ |
| க | த | லை | வி | தே | மி | 10 பூ | 11 ஆ | | ள | | ள |
| ர் | ம் | 12 த | ய் | செ | ழ் | மி | த | ம் | த | 13 வே | ம் |
| கூ | 14 க | ர் | க | மு | னி | வ | ர் | ள | சி | னா | பா |
| ங் | ங் | ர் | ம | ம் | சி | ர | 15 ந | கு | ள | யா | டி |
| நா | ர | | ணு | ஷ் | வி | கா | 16 ம | கா | 17 து | ரி | |
| ரு | 18 ஸ்ரீ | வை | கு | ண் | ட | ம் | | 19 ஸ்ரீ | | 20 ஹ | |
| 21 தி | | | ர் | வா | ழ் | யா | கை | ங் | ம | ரு | 22 தி |

என்ற பாசுரமொன்றே ஸேவிக்கப்படும். மற்றவை முன் போலவே நடக்கும். இப்படி எம்பெருமானார் மங்களாசாஸனம் செய்தருளுவதனால் திருமலையில் மூல பேரத்திற்கு ப்ராதன்யம் வந்ததென்று திருமலையொழுகு தெரி விக்கிறது. இவ்விதமாக இம்மூன்று நாட்களிலும் மங்களா சாஸனம் முடிந்தபின்பு எம்பெருமானார் மறுபடியும் விமான ப்ரதக்ஷிணமாகப் புறப்பட்டு தாடி பஞ்சகம், யதிராஜ விம்சதி கோஷ்டியுடன் தம் ஸந்நிதி சேர்ந்து தீர்த்தம், அனந்தாழ்வான் (பாதுகை), ப்ரஸாதம் இவற்றை கோஷ்டியாருக்கு ப்ரஸாதிப்பர்.






# சூரிய நமஸ்காரமும் யோகாசனங்களும் – ஓர் பார்வை

– டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட், கோயம்புத்தூர்,
8940991234

### சூரிய மந்திரத்தின் பொருள்

ஓம் மித்ராய நம: – சிறந்த நண்பன்

ஓம் ரவயே நம: – போற்றுதலுக்குரியவன்

ஓம் சூர்யாய நம: – ஊக்கம் அளிப்பவன்

ஓம் பானவே நம: – அழகூட்டுபவன்

ஓம் ககாய நம: – உணர்வுகளுக்கு வலிமை தருபவன்

ஓம் பூஷ்ணே நம:–புத்துணர்ச்சி தருபவன்

ஓம் ஹிரண்யகர்ப்பாய நம: – ஆற்றல் அளிப்பவன்

ஓம் மரீசயே நம: – நோய்களை அழிப்பவன்

ஓம் ஆதித்யாய நம: – கவர்ந்திழுப்பவன்

ஓம் சவித்ரே நம: – சிருஷ்டிப்பவன்

ஓம் அர்க்காய நம: – வணக்கத்திற்கு உரியவன்

ஓம் பாஸ்கராய நம:–ஒளிமிகுந்து பிரகாசிப்பவன்.

மேற்கண்ட மந்திரத்தை உச்சரித்தவாறு சூரிய நமஸ்காரம் செய்யும் போது நமது மனம் சிதறாமல் ஒருமுகப்படுகிறது. மந்திரத்தை உச்சரிக்கும்போது அதன் அதிர்வு நமது உடலின் எல்லா பகுதிகளுக்கும் சென்று பல உணர்வுகளை ஏற்படுத்தும் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மையாகும்.

உலகிற்கு இருளை நீக்கி ஒளியைத் தருபவன் சூரியன். கண்ணிற்கு ஒளியும், உடலுக்கு பிரகாசத்தையும், மனதுக்கு வலிமையையும் தரும் சூரிய பகவானை காலை நேரத்தில் கதிரொளி முதலில் படரும் வேளையில் கிழக்கு முகமாக நின்று வணங்குவதுதான் சூரிய நமஸ்காரம் ஆகும். சூரிய நமஸ்காரம் செய்வதற்கு முன் சூரியனை வழிபட வேண்டும்.

சூரிய நமஸ்காரம் பல்வேறு யோகாப்பியாசங்களை இணைப்பது. அளவாக சுவாசத்தை விடப் பயிலுவது, உடம்பின் பகுதிகளை இயக்கி சுறுசுறுப் படையச் செய்வது, சூரிய பகவானின் அருளைப் பெற்று மனதை பிரகாசமடையச் செய்வது ஆகிய யாவுமே சூரிய நமஸ்காரம் மூலம் நிறைவேறுகிறது.

சூரிய நமஸ்காரம் முக்கியமாகக் கண்களுக்கும், முதுகெலும்பிற்கும் சக்தியை அருள வல்லது, சூரிய நமஸ்காரத்தில் பன்னிரெண்டு யோகப் பயிற்சிகள் உண்டு. ஒவ்வொரு பயிற்சியையும் செய்யும் போது மனத்தில் அதன் பிரதிபலிப்பாகப் பிரகாசமும், அமைதியும், ஆனந்தமும் உருவாகிறது. உடலுக்கும், உள்ளத்துக்கும் இணைந்த பயிற்சி என்பதே சூரிய நமஸ்காரத்தின் தனிப் பெருமை.

### சூரிய நமஸ்காரம் செய்முறையும் அதன் பலன்களும்

சூரிய நமஸ்காரம் பன்னிரண்டு நிலைகளைக் கொண்டது. ஒவ்வொரு நிலையின் செய்முறை பயிற்சியும், பயிற்சியால் ஏற்படும் பலன்களும் தெளிவாகப் இப்போது பார்ப்போம்.

### முதல் நிலை

சூரிய பகவானை நோக்கி நிமிர்ந்து நிற்க வேண்டும். இரு குதிகால்களையும் சேர்த்து வைத்து, இரு கரங்களையும் குவித்து, இரு கரங்களின் பெரு



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -30

குருசரணாம்புஜ நிர்ப்பர பக்த:
ஸம்ஸாரா தசிராத் பவமுக்த:|
ஸேந்த்ரிய மானஸ நியமா தேவம்
த்ரக்ஷ்யசி நிஜ ஹ்ருதயஸ்த்தம்
தேவம் ||

**நீ உன்னுடைய புண்ணிய பாவங்களாகிய (கர்மாவினால் வரக்கூடிய) அனைத்து பாரங்களையும் (சுமைகளையும்) உன்னுடைய குருவின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்து விட்டு, பக்தி செய்வாயேயானால், விரைவிலேயே உனக்கு பிறவித்தளை நீங்கும். இவ்வாறே, உனது புலன்களையும், மனத்தையும் கட்டுப் படுத்துவாயேயானால் உன் உள்ளத்திலே அந்தர் யாமியாக தங்கியுள்ள, பகவானை தரிசிப்பாய்.**

– திரு. சீதாராமன், சென்னை.

– முற்றும்.

விரல்கள் மார்பைத் தொட்டுக் கொண்டு இருக்குமாறு வைத்துக் கொண்டு சுவாசத்தை வெளிவிட்டவாறு நிற்க வேண்டும்.

### முதல் நிலையின் பலன்கள் :

கண்கள், இருதயம், சுவாசப்பைகள், ஜீரணக் கருவிகள் இவை தம் வேலைகளைச் சரியாகச் செய்யத் தூண்டப்படும்.

### இரண்டாம் நிலை :

சுவாசத்தை உள்ளிழுத்தவாறு இரு கரங்களையும் தலைக்கு மேல் உயர்த்தி, இடைக்கு மேற்பட்ட பகுதியை மெதுவாக வளைத்து முதுகெலும்பை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் பின்னால் கொண்டு செல்ல வேண்டும்.

### இரண்டாம் நிலையின் பலன்கள் :

இடுப்பு சிறுத்து, வயிறு ஒட்டி, மார்பு அகன்று நிமிர்ந்து நடக்கச் செய்யும். முதுகெலும்பு பலப்படும்.

### மூன்றாம் நிலை :

சுவாசத்தை வெளிவிட்டவாறு முதுகெலும்பை முன்புறமாக வளையச் செய்து குனிந்து முழங்காலை வளைக்காமல் கரங்களை கால்களின் அருகில் தரையில் பதித்து கைவிரல்கள் கால் விரல்களுக்கு இணையாக இருக்கப்படும். முகம் முழங்காலுக்கு இணையாக இருக்கட்டும்.

### மூன்றாம் நிலையின் பலன்கள்

இடுப்பு, வயிறு, கால்கள், கைகள் வலிமை பெறுகின்றன.

### நான்காம் நிலை :

இடது காலை முழங்கால் மடிப்பில் வளைத் துக்கொள். முழங்கால் தரையில் பதிந்து மண்டி யிட்ட நிலையில் இருக்க வேண்டும். சுவாசத்தை உள்ளிழுத்து வலது காலை பின்னால் நீட்டவும், இரு கைகளும் இடது முழங்காலுக்கு இரு பக்கங் களிலும் தரையில் ஊன்றி இருக்க வேண்டும். முகத்தை நிமிர்த்தி சுவாசத்தை உள்ளிழுக்க வேண் டும்.

### நான்காம் நிலையின் பலன்கள் :

கால்களும், கரங்களும், இடுப்பும் வலிமை பெற்று நம் விருப்பப்படி இயங்கும் தன்மையைப் பெறும்.

### ஐந்தாம் நிலை :

மேலே உள்ள நிலையில் இருந்தவாறு இடது காலையும் பின்னுக்குத் தள்ள வேண்டும். இரு கால்களும் சேர்ந்த நிலையில் இருக்க வேண்டும். இரு கைகளும் தரையில் ஊன்றிய வண்ணம் உடம்பினை தாங்கிக் கொண்டிருக்கின்றன. முதுகையும், கைகளையும் நிமிர்த்தி சுவாசத்தை வெளியிட வேண்டும்.

### ஐந்தாம் நிலையின் பலன்கள் :

கழுத்துதசை உருண்டு திரண்டு வலிமை பெற்று உடலுக்கு அழகைத் தரும். முதுகெலும்பு இளமையடைந்து சுறுசுறுப்பாக செயல்படும்.

### ஆறாம் நிலையின் பலன்கள் :

கைவிரல், கால், கால் விரல்கள், இடுப்பு, முதுகு வலிமை பெறும். மார்பு விசாலப்படும்.

### ஏழாம் நிலை :

உடம்பை இடுப்பிலிருந்து மேலே நிமிர்த்தவும். மார்பு முன்புறமாகவும், தலை உயர்ந்து

பின்புறமாகவும் இருக்க வேண்டும். புஜங்களை நீட்டி விரியச் செய்து, முதுகெலும்பை பின்புறமாக வளையச் செய்ய வேண்டும். சுவாசத்தை உள்ளிழுத் தவாறு முடிந்தவரை உடம்பை வளைக்கவும். கைகளும், கால்களும் தரையில் ஊன்றி இருக்க வேண்டும். உடம்பின் பாரம் முழுவதையும், உள்ளங் கைகளும், கால்களும் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

**ஏழாம் நிலையின் பலன்கள் :**

இந்நிலையில் உடலிலுள்ள எல்லா பாகங்களும் உருண்டு, திரண்டு உடம்பிற்கு அழகைத் தரும். கண்கள் ஒளி பெறும். இந்த பயிற்சியால் முதுகு அதிகமாய் அழகு பெறுகின்றது. முதுகெலும்பு வளைவதால் பலப்படுகிறது. நம் உடம்பு அசையும் தன்மை அதிகரிக்கின்றது.

**எட்டாம் நிலை :**

இடுப்பை மேலே உயர்த்தி பின்னுக்கு கொண்டு செல்ல வேண்டும். சுவாசத்தை வெளிவிட்டவாறு இதைச் செய்ய வேண்டும். முதுகை வளைத்து தலையை முன்புறமாக இரு கைகளுக்கும் இடையில் கொண்டு வரவேண்டும். கைகளும், பாதங்களும் தரையில் ஊன்றி உடம்பின் பாரத்தை தாங்கிக் கொண்டிருக்கும். இது தான் சூரிய நமஸ்காரத்தின் உச்சநிலையாகும்.

**எட்டாம் நிலையின் பலன்கள் :**

வயிற்றுப் பகுதியிலிருக்கும் வேண்டாத சதை களைக் குறைத்து வயிறு பலமடையும், இடுப்பு, முதுகு, கை, கால்கள் வலிமைபெறும்.

**ஒன்பதாம் நிலை :**

இனி இறங்கும் நிலை, அதாவது இயல்பு நிலைக்குத் திரும்பும் நிலை. இடது காலை மடக்கி கைகளின் அருகில் கொண்டு வரவும். சுவாசத்தை உள்ளிழுத்து வலது காலை பின்புறம் நீட்டவும். இந்நிலை நான்காவது நிலை போன்றது மற்றும் நான்காம் நிலையின் பலனே இதற்கும் உண்டு.

**பத்தாம் நிலை :**

வலது காலையும் கைகளின் பக்கத்திற்கு கொண்டு வரவும். கால்களை ஊன்றி தலையைக் குனியவும். இந்நிலை மூன்றாவது நிலை போன்றது, ஆதலால் மூன்றாவது நிலையின் பலனையே இது அளிக்கும்.

**ஆறாம் நிலை :**

சுவாசத்தை வெளிவிட்டவாறு முழங்கைகளை வளைத்துக் கொள். உடம்பை தரைவரை தாழ்த்தி நெற்றி, மார்பு, முழங்கால் ஆகியவற்றால் தரையைத் தொடவும். உடம்பின் மற்ற பகுதிகள் தரையில் படவேண்டாம். இடையின் முற்பகுதியை வளைத்து பின்புறம் உயரச் செய்ய வேண்டும்.

**பதினொன்றாம் நிலை**

சுவாசத்தை உள்ளிழுத்து உடம்பை நீட்டி நிமிர்ந்து கைகள் இரண்டையும் புஜத்துடன் தலைக்கு மேல் கொண்டு போக வேண்டும். இரண்டு உள்ளங் கைகளும் சேர்ந்திருக்க வேண்டும். இந்நிலை இரண் டாவது நிலையை போன்று இருக்கும், ஆதலால் இரண்டாம் நிலைக்குரிய பலனே இதற்கு கிடைக்கும்.

**பன்னிரெண்டாம் நிலை :**

நிமிர்ந்து நின்றவாறு இரு கைகளும் கூப்பிய நிலையில், இரு கைகளின் பெருவிரல்களும் மார்புப் பகுதியை தொட்டுக் கொண்டு இருக்க வேண்டும். இந்நிலை முதல்நிலையை போன்று இருக்கும். ஆதலால் முதல் நிலைக்குரிய பலன்களே இதற்கும் கிடைக்கும். இவையே சூரிய நமஸ்காரம். இதனை இளங்காலைப் பொழுதில் செய்ய வேண்டும்.

ஆரம்பத்தில் ஓரிரு தடவை செய்தாலும் பழகிய பின் பன்னிரெண்டு முறைகள் செய்வது உடலுக்கு நல்ல பலனைத் தரும். சூரிய நமஸ்காரம் பன்னிரெண்டு முறை செய்த பின் சாந்தியாசனம் நிலையில் தரையில் முதுகை அழுந்தப்படுத்தி கை, கால் மூட்டுக்களைத் தளர வைத்து உச்சி முதல் பாதம் வரை உடம்பை முழுமையாகத் தளர்த்தி ஓய்வு அடையச் செய்ய வேண்டும்.

இப்போதெல்லாம் நடைமுறையில் உள்ள சூரிய நமஸ்காரத்தின் தோற்றத்துடன் இவை எந்த வகையி லும் தொடர்புடையவை அல்ல.சூரிய நமஸ்கார பயிற்சிகள் ஸ்வாமி சமரத் ராம்தாஸ் அவர்களால் 17வது நூற்றாண்டில் தொகுக்கப்பட்டதாக கூறப்படு கிறது. சூரிய நமஸ்கர் என்பது 12 யோகா தோற்றங் களின் வரிசை. கால்களை குறுக்கி அல்லது நீட்டுவ தன் மூலம் அவை இணைக்கப்படுகின்றன. இந்த நிலைகள் யோகா பயிற்சி பள்ளிகளுக்கு இடையில் வேறுபடுகின்றன.

தொடரும்...



# ஆழ்வாரின் வாடாத மலர்கள்

– டாக்டர் கலியன் சம்பத்,
சென்னை, 74010 76411.

எம்பெருமானுக்கு பூமாலையும் பாமாலையும் சமர்ப்பித்தவர்கள் பெரியாழ்வாரும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் ஆவர். முன்னவர் பொங்கும் பரிவாலே பகவானுக்கே பல்லாண்டு பாடியதால் பெரியாழ்வார் என்ற பெயர் பெற்றார் என்றும், பின்னவர் தம் தொண்டால் பகவானுக்குப் பணிகள் செய்து ஏற்றம் பெற்றதால் "துன்பு புகழ் மாமறை யோன்" என்றும் மணவாள மாமுனிகளால் போற்றப் படுகிறார். தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்க நாதனுக்கு எத்தனை பூமாலைகள் சமர்ப்பித்தார் என்று நம்மால் கூற இயலாவிடினும், இரண்டு பாமாலை சமர்ப்பித்துள்ளார் என்று கூறமுடிகிறது. இப்பாமாலைகளான திருமாலையும், திருப்பள்ளி எழுச்சியும் இன்றுவரை வாடாது நமக்கு பக்தி மணமாகிய நறுமணத்தை தந்துக் கொண்டிருக் கின்றன.

திருமாலையின் பெருமையை "திருமாலை அறியாதார் திருமாலை அறியாதாரே" என்று ஆன்றோர்களின் வாக்கால் அறியலாம். அது போலவே முதன்முதலாக பகவானை துயில் எழுப்பும் பாசுரங்களைக் (சுப்ரபாதம் போன்று) கொண்டதாக திருப்பள்ளியெழுச்சியும் புகழப் படுகிறது. திருமாலையில், தொண்டரடிப்பொடி ஆழ்வாரைப் பெருமாள் துயில் உணர்த்தினார் என்றும் (அதாவது இவர் நல்வழிப்பட்டார் என்றும்), திருப்பள்ளியெழுச்சியில் இவர் பெருமாளைத் துயில் உணர்த்துகிறார் என்றும் சான்றோர் கூறுவர். மேலும், அஞ்ஞான நித்திரையிலிருந்து விழித்துக் கொள்ளும் பக்தியனுபவங்களைத் திருமாலையில் காணலாம் என்றும், யோக நித்திரையில் இருக்கும் பகவானை மிக்கக் காதலால் விழித்துக் கொள்ள பாடியவை திருப்பள்ளி எழுச்சிப் பாசுரங்கள் என்றும் பெரியோர் கூறுவர்.

தமிழ் இலக்கணம், புறத்திணை இயலில் துயிலெடை நிலை என்று தொல்காப்பியர் கூறுவது, தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப்பள்ளி எழுச்சிக்கும் பொருந்தும் என்பர்.

எம்பெருமானின் திருநாமம் கிடைத்தற்கரிய ரத்தினம் போன்றது. சிலர், இதன் அருமைத் தெரியாமல் வாழ்கிறார்கள். சிலர், எம்பெருமானின் திருநாமங்களைக் கூறி பல சித்திகளையும், சக்தி களையும் பெற்று அதன் மூலம் செல்வம் சேர்க்கின்ற னர். ஆனால், சிலர் எம்பெருமானின் திருநாமங் களைக் கூறி, அவற்றையே ஆபரணமாக எண்ணி அனுபவிப்பர். இவர்களது நோக்கம் தொண்டுபல செய்து, பக்தியுடன் கூடிய கைங்கர்யமே பயனாகக் கருதி இருப்பர். இச்செயல் நன்கு செய்ய, பூமியிலே வாழ்தலே சிறப்பு என்பதால், தொண்டரடிப்பொடி ஆழ்வார் "இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும், அச்சுவைப் பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்றார்.

முதலாழ்வார்கள் மேன்மைக்கு எல்லையான பரத்வத்திலும், நீர்மைக்கு எல்லையாக திருமலை யிலும் ஈடுபட்டனர். தொண்டரடிப்பொடியாழ்வார் அர்ச்சாவதாரங்களில் சிறப்பான பெரிய பெருமாளை – நம்பெருமாளை – அரங்கனைத் தவிர வேறு அறியாதிருந்த பெருமைமிக்கவர் என்று பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தால் உணரலாம்.


திருமாலை முதல் பாசுரத்தில் "நின்நாமம்" என்று கூறி, பகவான் கட்டிப்பொன் போன்றவன்,

அவன் நாமம் பனிப்பொன் (ஆபரணமான பொன்) என்று நாம் உணரவைத்து மந்திரம் என்று கூறாது நாமம் என்று சொன்னது, மந்திரம் சொல்வதற்குரிய காலநியமம், ஆசார்ய நியமம் முதலியன உண்டு. திருநாமம் சொல்வதற்கு அதெல்லாம் இல்லை என்று நாம் உணர வைத்தார். எனவேதான் இன்றும் திருமலையிலும், மற்றக் கோயில்களிலும் கோவிந்தன் நாமமே வெகுவாக ஒலிக்கப்படுகிறது. அடுத்த பாசுரத்திலும் “ஆயர்தம் கொழுந்தே” என்று சொல்லி “கோவிந்தா” என்ற பெயரே எளிமை, கருணை முதலான குணங்களை உடையது என்று சுட்டுகிறார்.


“மேம்பொருள் போகவிட்டு” என்று தொடங்கும் 38ஆம் பாசுரம், திருமாலையின், உயிர்ப்பாட்டு என்று பெரியோர் கூறுவர். துவயத்தின் இரு கண்டப் பொருளையும், இவர் ஒரே பாசுரத்தில் இங்கு கூறியுள்ளார் என்றும் கூறுவர். “காம்பறத் தலை சிரைத்துன்” என்ற இப்பாசுர சொற்றொடரால் எல்லா ஆசைகளையும்விட்டதற்கான அடையாளமாக, மொட்டையடித்துக் கொள்வதாகக் (சந்நியாசிகள், துறவிகள் போன்றோர் மட்டுமல்ல எளிமையான மக்களும் உணர்ந்துக் கொள்ள ) கூறியுள்ளார் என்பர்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருப் பள்ளியெழுச்சி, பகவானைத் துயில் எழுப்புவது என்றாலும், நாமும் அதிகாலையில் எழுந்து, நீராடி, வழிபாடு செய்து, புத்துணர்ச்சி பெறுவதற்கும் உதவுகிறது எனலாம். “கதிரவன் குண திசைச் சிகரம் வந்தடைந்தான்.....” என்று தொடங்கும் பாசுரத்தில் யானைகளின் கூட்டம் ஒலி எழுப்புவ தோடு, முரசம் ஒலிப்பது, கடலோசை எனக் கேட்கிறது; எனவே அரங்கனே, அனைவரையும் காக்க பள்ளி எழந்தருள வேண்டும் என்று கூறுகிறார். “ஆயிரங்கோடி சூரியபிரகாசமான திருமுடிமேலே! உலகுக்கு ஒளிதரும் சூரியன் திருவடி கீழே, இவ்வாறு இரு விளக்குகள் ஒளிவிட உமக்கு நித்திரை வருமா?” என்று நஞ்சீயர் நயம் கூறுவார். வெளி இருள் மட்டுமன்று நம் மன இருளும் விலக அவனருள் கிடைக்க வேண்டுகிறார் என்று பொருள் கொள்ளலாம்.

இரண்டாம் பாசுரத்தில் , பொழுது விடிந்ததற்கு உரிய அடையாளங்களைக் கூறுகிறார். கூப்பிட்ட உடனே ஓடி வந்து கஜேந்திரனுக்கு அருள் செய்தவனே! உள்ளத்தில் மதம் பிடித்த எங்களைக் காக்க துயில் நீக்க வேண்டும் என்று கருதலாம். மூன்றாம்



பாசுரத்தில், சங்கு, சக்கரங்களை உடைய பெருமாளே! நீ எழுந்து எங்கள் வாழ்வில் தென்றல் (சுகம்) வீசச் செய்; எங்கள் கறுப்பு உள்ளத்தை வெள்ளையுள்ளமாக (பால் போல) மாற்றுவாயாக!



நான்காம் பாசுரத்தில், எருமைகள் மேய்ச்சலுக்குச் செல்கின்றன; ஆயர்கள் புல்லாங்குழல் ஊதிக் கொண்டு பின் செல்கின்றனர். வண்டுகளும் ஆரவாரம் செய்கின்றன, விசுவாமித்திர முனிவரின் யாகம் காத்து (தாடகை வதம்) பின்னர் யாகம் முடிந்ததும், அவப்பிரதஸ்நானம் செய்த இராமபிரானே! நீ பள்ளி எழுந்து, எருமைக்குணம் படைத்த எங்களையும் உன் அன்பு என்ற புல்லாங் குழல் ஊதி ரக்ஷிக்க வேண்டும். அதாவது எங்கள் மந்த புத்தியை நீக்கிட வேண்டும்.



ஐந்தாம் பாசுரத்தில், பறவைகளுக்கு (புட்கள்) நம்மை ஒப்பிடுகிறார். சென்ற பாசுரத்தில் வண்டுகள் ரீங்காரம் செய்தன. பெருமானே! உன்னிடம் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் உன்னை வண்டுபோல உணர்ந்துக் கொண்டனர்; பறவைகள் தாமாக ஒலி எழுப்புவது, எங்களைப் போன்ற தாமச குணமுடைய குடும்பத்தினர் உணரக் கொஞ்சம் தாமதமாகிறது; இருப்பினும் எங்களைக் காக்க பள்ளி எழுந்து அருளாயே! ஆறாம் பாசுரத்தில், பெரிய மலை போன்ற உன் கோயிலின் முன்னே முப்பத்து முக்கோடி தேவர்களும் உன் தரிசனம் காண நெருக்கியடித்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களுக்காகவே பள்ளி எழுந்தருள வேண்டும். மானசீகமாக உன்னை சேவிக்க அவர்களுடன் நாங்களும் காத்திருக்கிறோம்.

ஏழாம் பாசுரத்தில், இந்திரன் உள்ளிட்ட தேவர்களும், சனகாதி முனிவர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள், யட்சர்கள் என அனைவரும் வந்து நிற்பதால், வானத்திலும், பூமியிலும் நிற்க இடமில்லாமல் கூட்டம் சேர்ந்து விட்டது. ஆகவே அரங்கனே எழுந்தருள வேண்டும். எட்டாம் பாசுரத்தில் அரங்கனே! தேவர்கள், கபிலை என்ற பசு, கண்ணாடி என பல உபகரணங்களைக் கொண்டு வந்துள்ளனர். தும்புருவும் நாரதரும் மங்கள கீதமிசைக்க வந்துள்ளனர். இதைக்காண சூரியன் தன் ஒளி பரப்பித் தோன்றியுள்ளதால், உன் அக ஒளித் தோன்ற நீ எழுந்தருள வேண்டும்.

ஒன்பதாம் பாசுரத்தில், அரங்கநாதப் பெருமாளே! தாழ்ந்தவர்களான கின்னரர்கள், கருடர்கள், கந்தர்வர்கள் என்போர் கீதங்கள் இசைக்கின்றனர். உயர்ந்தோரான முனிவர்கள், தேவர்கள், சாரணர்கள், இயக்கர், சித்தர் ஆகியோரும் உன் திருவடி தொழ வந்துள்ளனர். உயர்வும் தாழ்வும் என வேற்றுமைக்காட்டாது அருள் செய்பவனே! இவர்களுக்கு அருள் செய்தல் வேண்டும். (எங்களுக்கும் உயர்வு, தாழ்வு காணாத உள்ளம் அமைய வேண்டும்). பத்தாம் பாசுரத்தில், தொண்டரடிப் பொடி என்ற அடியேன், காவிரி சூழ்ந்த திருவரங்கத்தில் பள்ளி கொண்ட அரங்கனே! உமக்கு அணிவிக்க துளசி மாலை தொடுத்துக் கொண்டு வருகிறேன். என்மீது இரக்கம் கொண்டு அருள்செய்து உன் அடியார்க்கு கைங்கர்யம் செய்து அருள்வாயாக!

திருமந்திரத்தின் கருப் பொருளான கைங்கர்ய சேவையை ஆழ்வார் இங்கு வேண்டுகிறார். திருமாலையில், அரங்கனுக்குத் துவளத் தொண்டு செய்ய அச்சுவை பெறினும் வேண்டேன் என்றவர், திருப்பள்ளியெழுச்சியில் அடியார்களுக்கு, கைங்கர்யம் செய்ய (சேவை செய்ய) உன்னடியார்க்கு ஆட்படுத்தாய் என்று முடியான பிரார்த்தனையைக் கூறி அவனருள் பெற அவனையே பள்ளி எழுந்தருளாயே ! என்கிறார். திருமாலை கவிதை அனுபவத்திலும், பக்தியனுபவத்திலும் சிறந்தது என்றும், திருப்பள்ளியெழுச்சி இயற்கை அழகுகள் வர்ணிக்கப்பட்டவை என்றும் ஆன்றோர் கூறுவர்.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் பிரபந்தம் ஆழ்ந்த பொருட்செறிவோடும், சொல்லப்படும் பொருள் சிறப்பால் அமைந்துள்ளதும் இதன் பெருஞ்சிறப்பு என்று சான்றோர் கூறுவர். வைகுண்ட ஏகாதசி நாளில் வேங்கடவன் ரூப சௌந்தர்யத்தில், ஆழ்வார்களின் ஞான சௌந்தர்யத்தில் ஈடுபட்டு எல்லா நலமும், எல்லா வளமும் பெற்று வாழ்வோமாக!

# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## त्रयोदशः पाठः பாடம்-13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| प्रयाणम् | = பயணம் | दिवा | = பகல் | दौष्ट्यम् | = அரட்டை |
| तथाऽपि | = இருந்தபோதிலும் | भिक्षाटनम् | = பிச்சையெடுத்தல் | सर्वथा | = அடியோடு |
| अकुर्वन् | = செய்தீர் | अकुरुत | = செய்தீர்கள் | अकुर्म | = செய்தோம் |

### வினாக்கள்

1. त्वं ह्यः नक्तं कुत्र प्रयाणमकरोः?
2. बालकाः दौष्ट्यं कुर्वन्ति।
3. ते कुत्रापि नासन्।
4. तथाऽपि एते पाकं अकुर्वन्।
5. ब्राह्मणाः भिक्षाटनं कुर्वन्ति।
6. अद्य पाकः कथमस्ति?
7. अद्य व्यापारं वयमेव अकुर्म।
8. तथाऽपि ते केऽपि अत्र न सन्ति।
9. अद्य दिवा सर्वथा त्वं अत्र नासीः।
10. अद्य पाकं यूयमेव अकुरुत किम्?

1. நான் எங்கும் பயணம் செய்யவில்லை.
2. நீங்களேதானா சமையலை செய்தது?
3. நாங்கள் இல்லை, யாரோ செய்தார்கள்.
4. மற்றவர்களில் பிராமணர்கள் இருக்கிறார்கள்.
5. அவர்கள் யார்?
6. இவர்களே!
7. நேற்று சிறுவர்கள் அரட்டை செய்தார்கள்.
8. நீ பிச்சை எடுத்தாயா என்ன?
9. நீ இப்படி இரு.
10. நான் வணக்கத்தைச் செய்து கொண்டிருக்கிறேன்.

### விடைகள்

1. நீ நேற்று இரவு எவ்விடத்திற்குப் பயணம் செய்தாய்?
2. சிறுவர்கள் அரட்டை அடிக்கிறார்கள்.
3. அவர்கள் எங்கு இல்லாதிருந்தார்கள்.
4. இருந்தபோதிலும் இவர்கள் சமையல் செய்தார்கள்.
5. பிராம்மணர்கள் பிச்சை எடுக்கிறார்கள்.
6. இந்த வேளை சமையல் எப்படி இருக்கிறது?
7. இப்போது வியாபாரம் நாங்களே செய்தோம்.
8. இருந்தபோதிலும் அவர்கள் எவரும் இங்கு இல்லை.
9. இன்று காலை அடியோடு நீ இங்கு இருக்க வில்லை.
10. இன்று சமையல் நீங்களே செய்தீர்களா என்ன?

1. अहं कुत्रापि प्रयाणं न अकरवम्।
2. यूयमेव पाकं अकुरुत किम्?
3. वयं न, ये केऽपि अकुर्वन्।
4. अन्ये ब्राह्मणाः सन्ति।
5. ते के?
6. एते एव।
7. ह्यः बालकाः दौष्ट्यं अकुर्वन्।
8. त्वं भिक्षाटनमकरोः किम्?
9. त्वं एवं भव।
10. अहं नमस्कारं करोमि।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ராால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

## 63

## 108 திவ்யதேச வைபவம்

# திருக்காட்கரை

**புராண வரலாறு :**

கபிலர் என்கிற ரிஷி – தபஸ் செய்ய இந்த தலத்தைத் தேர்வு செய்தாராம். இங்கு வந்தபோது, தண்ணீர் வசதியே இல்லையாம். தனது தவ வலிமையால் தண்ணீர் வளத்தை வருவித்து, சோலைகள் சூழ்ந்த இடமாக மாற்றி, அந்தச் சோலையில் பூத்த மலர்களினால் இந்த எம்பெருமானை அர்ச்சித்து வந்தாராம்.

வேறொரு பிராம்மணன், இந்தக் கோயிலே கதி என்று இங்கு வந்து யோகத்தில் ஆழ்ந்தான். அவ்வூரில், அச்சமயம் வசித்த பணக்காரன் ஒருவனின் வாழைத் தோட்டத்தில் வாழை மரங்கள் குலை தள்ளாமலேயே இருந்தன. பணக்காரன், இந்த எம்பெருமானை வேண்டி, பொன்னால் ஆன வாழைக்குலையைச் செய்து திருக்காட்கரை அப்பனுக்கு சமர்ப்பிக்க பணக்காரன் எண்ணம் ஈடேறியது. ஆனால் அந்த பொன்னால் ஆன வாழைக் குலை காணாமல் போகவே, யோகத்தில் உள்ள பிராம்மணனே திருடியிருப்பான் என்று அவ்வூர் அரசன் சந்தேகப்பட்டு யோகியை அடிக்க, யோகி மூர்ச்சிக்க, தன் சந்நிதியிலேயே தன் நிரபராதியான பக்தன் துன்பப் படுத்தப்படுவதைச் சகியாத அப்பன், கர்ப்பக்ருஹத்தில் திருமஞ்சன தீர்த்தம் வெளியே செல்லாமல் பொன்னால் ஆன வாழைக்குலை, அந்த வழியை அடைத்திருப்பதை உணர்த்த, அரசனும் ஊர்மக்களும், யோகியிடம் மன்னிப்பு கேட்டனர்.

ஆனால், யோகி, பழியைப் பொறுக்க முடியாமல், மானம் தாங்காமல், குற்றமற்ற தனக்கு, ஆராயாமல் கேடு செய்த மன்னனும் திருக்காட்கரை ஜனங்களும் உண்ண உணவோ, உடுப்பதற்கு ஆடையோ இல்லாது அலைவார்கள் என்று சாபமிட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

அப்பன், குறுக்கிட்டான். “சிலர் செய்கின்ற குற்றங்களினால் மன்னனோ, மக்களோ துன்பப் படலாமா” என்று யோகியைக் கேட்க, யோகி, “கூரை வீடும், கொள்ளித் தீபமும் இவ்வூரில் என்று ஏற்படுகிறதோ, அன்று முதல் சாபவிமோசனம்” என்கிறான். கோயிலிலேயே, தற்கொலை. அதுவும் பிராம்மணன். அவன் “ப்ரம்மராக்ஷஸனாக” அவ்வூரில் அலைந்தான். அச்சமயம் யவனர் படையெடுப்பு நிகழ்ந்து, ஊரையே அழித்தனர். ஊர்மக்கள் ஒன்று கூடி கோயிலின் வெளிமதிள் சுவற்றில் ப்ரம்மராக்ஷஸனை மந்திரத்தால் கட்டி அங்கு ஓரிடத்தில் நிறுத்தி திருக்காட்கரை அப்பன் பிரசாதத்தை, ஒவ்வொரு நாளும் ப்ரம்மராக்ஷஸனுக்கு அளித்தனர். ப்ரம்மராக்ஷஸன் ஆன யோகியின் ஆத்மா சாந்தி அடைந்தது. மக்கள், மூங்கில் கழிகளால் வீடுகள் ஏற்





– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.



படுத்திக் கொண்டனர். கோரைப்புற்கள், கொள்ளித் தீபமாக ஆயின. இப்படிப் பலகாலம் செல்ல, கேரள அரசர்கள், தலையிட்டு பழைய வளத்தை, பெறும்படி செய்தார்கள்.

**சிறப்புகள் :**

இந்த எம்பெருமானை காட்கரைவாழும் "தெய்வவாரி" என்கிறார் நம்மாழ்வார். இந்த திவ்ய தேசம், கடலில் மணிகள், பவளம், முத்து முதலியன உற்பத்தியாவதைப் போல, பல தெய்வங்களும் உற்பத்தி ஆகும் திவ்யதேசம் என்கிறார்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | திருக்காட்கரை அப்பன் (தெற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| மூலவர் | : | அப்பன் |
| தாயார் | : | வாத்ஸல்யவல்லி, பெரும் செல்வநாயகி |
| விமாநம் | : | புஷ்கல விமாநம் |
| தீர்த்தம் | : | கபில தீர்த்தம் |
| ப்ரத்யக்ஷம் | : | கபிலரிஷி |
| ஆகமம் | : | நம்பூதிரிகளின் பூஜாக்ரமம் |
| மங்களாசாஸனம் | : | ஸ்ரீநம்மாழ்வார் |

**விசேஷம்:**

ஓணம் பண்டிகை இத்திவ்யதேசத்தில் மிகவும் விசேஷம், மலையாள தேசத்தில் "அப்பன்" என்கிற திருநாமம் பெற்ற எம்பெருமான்.

**த்யானச்லோகம்**

*ஸ்ரீமந் நீரதஸேது நாமநகரே வாத்ஸல்ய வல்லயாந்வித:*
*தாதோஸௌ ஹரிரத்ர காபில ஸரஸ்தீரே விமாநோத்தமே |*
*தஸ்மிந் புஷ்கல நாமகே ரிஷிகணைஸ் ஸம்ஸேவ்ய மாநோமரை:*
*ரேஜேஸௌ கபிலாக்ய யோகி வரதச் சாகஸ்த்ய திக்வீக்ஷண: ||*

**பாசுரம்**

*"வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று*
*ஆர்வுற்ற என்னை ஒழிய என்னின் முன்னம்*
*பாரித்து தான் என்னை முற்றப்பருகினான்*
*கார் ஒக்கும் காட்கரை அப்பன் கடியனே"*

– நம்மாழ்வார்

*"மார்க்கமும் தாம்தாம் வழிபடும் தெய்வமும்*
*ஏற்க உரைப்பார் சொல் எண்ணாதே - தோல் குரம்பை*
*நாள் கரையா முன்னமே, நல்நெஞ்சே ! நாரணனாம்*
*காட்கரையாற்கு ஆள் ஆகாய் காண்"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

**நாமாக்கள்**

581. *ஓம் த்ரிஸாமா நம:*
ப்ருஹத், ரதந்தரம், வாமதேவ்யம் என்கிற மூன்று ஸாமரூபனே.
*ஓம் ஸோமபாயை நம:*
ஸம்ஹாரதேவதை பார்வதி அவளுடைய கேள்வன் ருத்ரன்; ருத்ரனுக்கு ஸ்வாமிநியே

582. *ஓம் ஸாமக: நம:*
ஸாமகானம் செய்பவனே
*ஓம் மாதவ்யை நம:*
பெருமானின் ரக்ஷிக்கும் செயலில் எப்போதும் அவருடன் சேர்ந்து இருப்பவளே

583. *ஓம் ஸாமா: நம:*
ஸாமவேத ரூபியே

ஓம் நித்ய கல்யாண்யை நம:
எப்போதும் மங்களம் நிறைந்தவளே

584. ஓம்நிர்வாண: நம:
மோக்ஷ ஸ்வரூபமானவனே
ஓம் கமலார்சிதாயை நம:
தாமரை மலர்களால் பூஜிக்கத் தக்கவளே.

585. ஓம் பேஷஜ: நம:
பிறவிப் பிணிக்கு மருந்தே
ஓம் யோக ரூடாயை நம:
உபாசகர்களின் யோகத்தில் அவர்கள் நினைவில் அகலாது இருப்பவளே

586. ஓம் பிஷக் நம:
பிறவிப் பிணிக்குக் காரணத்தை அறிந்தவனே
ஓம் ஸ்வார்த்த ஜுஷ்டாயைநம:
பக்தர்களின் வேண்டுதலை, நிறைவேற்றுவதில் ஈடுபாடு உடையவளே.

587. ஓர் ஸந்யாஸக்ருத் நம:
பிறவிப்பிணி நீங்கக் காரணமாக இருப்பவனே
ஓம் வஹ்நிவர்ணாயை நம:
பக்தர்கள் குற்றமனைத்தையும், நெருப்புபோல், தூசாக்கும் குணமுள்ளவளே.

588. ஓம் ஸம: நம:
காமக்ரோதங்களை அடக்கியவனே
ஓம் ஜிதாஸுராயை நம:
அசுர இயல்பான தீயகுணங்களை அழிப்பவளே

589. ஓம் ஸாந்த: நம:
சாந்த ஸ்வரூபியே
ஓம் யஜ்ஜ வித்யாயை நம:
பகவானைப் பூஜிக்கும்போது அவரது நினைவு வந்து ஆனந்தப்படும் ஞானத்தை அளிப்பவளே

590. ஓம் நிஷ்டா: நம:
அடியார்களின் மனங்களில் இருப்பவனே
ஓம் குஹ்யவித்யாயை நம:
யஜ்ஜவித்யா குலையாதிருக்க, அடுத்தவர் காதில் படாதபடி உபதேசிக்கப்படும் மந்தர, மந்தர அர்த்த ஞானங்களை அளிப்பவளே

ஸ்ரீமதே வாத்ஸல்யவல்லீநாயிகா ஸமேத ஸ்ரீகாட் கரஸ்வாமி தேவாதி தேவபரப்ரஹ்மணே நம:

**குறிப்பு :**

திருச்சூரிலிருந்து, பேருந்து மார்க்கம் வழியே 23 கி.மீ., இரயில் நிலையத்திலிருந்து 3. கி.மீ.தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக்கோயிலில் இடம் பெற்றுள் ளனர்.

☎ 0877–2264592.

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலை யத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும்.

☎ 0877–2264584.

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷி யால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப் பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது.

☎ 0877– 2264587.

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ 0877–2264586.

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

குருகைக்காவலப்பன் வாழித்திருநாமம்...

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

பாண்டிய தேசத்தில் ஆழ்வார் திருநகரியில் தை மாதம் விசாக நக்ஷத்ரத்தில் அவதரித்தவர் குருகைக் காவலப்பன். இவர் இருப்பிடம் ஸ்ரீமந்நாத முனிகளுடைய திருப்பள்ளி. அது அன்றைய சோழதேசத்தில் திருக் காவேரிக்கரையில் கங்கைகொண்ட சோழ புரம் அருகில் குருகைக்காவலப்பன் கோயில் அமைந்துள்ளது. இந்த ஆசாரியார் ஸ்ரீமந்நாதமுனிகளிடம் அடிபணிந்து ஞானம் யோகம் முதலான செல்வங்களைப் பெற்றவர். இவருக்கு கல்வி அஷ்டாங்க யோகம். இவர் நூற்றைம்பத்தொரு ஆண்டுகள் எழுந்தருளி இருந்தார் என்று பெரியதிருமுடி அடைவு கூறும்.

மகரமதில் விசாகம்நாள் வந்துதித்தான் வாழியே
மாறன்தாள் நாதமுனி மலரடியோன் வாழியே
நிகரில் நன்ஞானயோகம் நீண்டு செய்வோன் வாழியே
நிர்ணயமாய் ஐந்து பொருள் நிலையறிவோன் வாழியே
அகமறுக்கும் இராமர்பதம் ஆசையுள்ளோன் வாழியே
ஆழ்வார்கள் மறையதனை ஆய்ந்துரைப்போன் வாழியே
செகதலத்தில் குருகூரில் செனித்த வள்ளல் வாழியே
செய்(ய) குருகைக் காவலப்பன் திருவடிகள் வாழியே

**பதவுரை**

மகரமதில் – மகர மாதமான தை மாதத்தில், விசாகநாள் – விசாக நக்ஷத்ரத்தில், வந்து உதித்தான் – வந்து அவதரித்தவர், வாழியே – வாழ வேண்டும். மாறன்தாள் – நம்மாழ்வாரின் திருவடியைப்பற்றின, நாதமுனி – ஸ்ரீமந்நாதமுனிகள், மலரடியோன் – மலர்ந்த திருவடிகளைப் பற்றியவர், நிகரில் – ஒப்பில்லாத, நன்ஞானயோகம் – பகவத்விஷயமாகிற நல்ல ஞான யோகத்தை, நீண்டு செய்வோன் – நீண்ட கால அனு பவத்தில் கொண்டவர், நிர்ணயமாய் – நிர்ணயிக்கப் பட்டதாய், ஐந்து பொருள் – அர்த்த பஞ்சகத்தின், நிலை அறிவோன் – நிலைமையை அறிந்தவர். அக மறுக்கும் – அகங்காரத்தை அறுக்கும், இராம பதம் – இராமபிரான் திருவடிகளில், ஆசையுள் ளோன் – ஆசை உடையவர். செகதலத்தில் – இவ்வுலகில், குருகூரில் – ஆழ்வார் திருநகரியில் அப்பன் கோயில் என்ற தேசத்தில், செனித்த வள்ளல் – அவதரித்த வள்ளல். செய்ய குருகைக் காவலப்பன் திருவடிகள் – நேர்மை யான குருகைக் காவலப்பன் திருவடிகள், வாழியே – வாழவேண்டும்.

**சிறப்புரை**

*(மகரமதில் விசாகம் நாள் வந்துதித்தான்)* குருகைக்காவலப்பன் "ம்ருகே விசாக ஸம்பூதம்" என்று தனியனில் அருளியபடி பௌர்ணமியும் மிருகசீரிஷ நக்ஷத்ரமும் கூடிய மகர மாதத்தில் விசாக நக்ஷத்ரத்தில் அவதரித் தார். இந்த மாதத்தில் மக நக்ஷத்ரத்தில் திருமழிசை ஆழ்வாரும், வைசாகி விசாக நக்ஷத்ரத்தில் நம்மாழ்வாரும் அவதரித்த பெருமையுடையதாகும். இந்த ஆசார்யருக்கு திருமழிசை ஆழ்வார் பிறந்த மாதத்திலும், நம்மாழ்வார் அவதரித்த நக்ஷத்ரத்திலும் அவதரித்த பெருமை ஒருசேரப்பெற்றது காணலாம்.

*(மாறன்தாள் நாதமுனி மலரடியோன்)* மலரடி – தாமரை போன்ற திருவடி "நாதமௌநி பதாச்ரிதம்" என்ற தனியனில் அருளியபடியே ஸ்ரீமந்நாத முனிகளுடைய திருவடியில்

ஈடுபட்டவர் குருகைக்காவலப்பன். ஸ்ரீமந் நாதமுனிகளும் மாறனான நம்மாழ்வாரிடம் உபதேசம் பெற்று நாலாயிரத் திவ்யபிரபந்தத்தைப் பெற்று, பவிஷ்ய தாசார்யரான எம்பெருமானாரை ஆழ்வார் திருவடிகளிலே தண்டம் ஸமர்ப்பித்துப் பெற்றதனாலும், குருபரம்பராநுஸந்தானத்திலே "ஸ்ரீமதே பராங்குசாய நம:" என்பதற்கு பிறகு ஸ்ரீமந்நாதமுநயே நம என்பதாலும் மாறன் தாளாக நாதமுனிகள் திகழ்கிறார் என்பது பொருத்தமுடையதாகும்.

அத்தகைய நாதமுனிகள் மலரடியை வணங்குபவர் அப்பன் ஆதலால் "மலரடியோன்" என்றபடி. மேலும் அஷ்டாங்க யோகத்தில் ஈடுபட்டவரான குருகைக்காவலப்பன் யோகிகளில் சிறந்தவராய், பெரும் புகழாளராய் ஸ்ரீமந்நாதமுனிகள் வாழ்ந்த வீரநாராயணபுரத்திலேயே ஆசார்ய கைங்கரியம் செய்துக்கொண்டு வாழ்ந்து வந்தார் என்றும் பிரபந்நாம்ருதம் கூறுவதால் "நாதமுனி மலரடியோன்" என்று கொண்டாடத்தக்கதாகும்.

*(நிகரில் நன்ஞானயோகம் நீண்டு செய்வோன்)* நன்ஞானம் – பகவத் விஷயமாகிய விலக்ஷணமான ஞானம். யோகம் – ஸம்பந்தம். திருவிருத்தத்தில் (பாடல்–93) "நன்ஞானத்து" என்பதற்குச் சேர பெரியவாச்சான்பிள்ளை, "ஞானமாகில் பகவத் விஷயத்தைக் குறித்தன்று வேறு இராது" என்றும், "ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு என்று முதலாழ்வாரும் அருளியது காண்க. திருவாய்மொழியில் (1–3–10) "துய்க்கறு மதியில் நன்ஞானத்துள்" என்று அருளியதற்கு ஏற்ப நன்ஞானமாவது நன்றான ஞானம் என்பர் நம்பிள்ளை. அதாவது, ஆத்மயாதாத்ம ஞானம். பரமாத்ம ஞானம் என்றபடி. அத்தகைய ஞானயோகம் கைவந்தவர் அப்பன் என்றபடி. மேலும் ஸ்ரீமந்நாதமுனிகளிடம் ஒப்பற்ற நன்மைதரும் அஷ்டாங்க யோகத்தை உபதேசமாகப் பெற்று, அவரிடம் பக்தியை காட்டும் வகையில் அவர் பரமபதித்த இடத்திலேயே ஆயுள் உள்ளவரையில் தம் ஆசார்ய திருவடியைத் தியானம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார் என்றும் பிரபந்நாம்ருதம் கூறுவதனாலும் "நீண்டு செய்வான்" என்றபடி.

*(நிர்ணயமாய் ஐந்துபொருள் நிலையறியோன்)* மோக்ஷத்திலே இச்சை உடையவர்களுக்கு அறிய வேண்டிய ரகசியம் மூன்றுஎன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது முதல் ரகசியமான திருமந்திரத்தில் ஐந்து பொருட்கள் அறிய வேண்டியவை. அவையாவன, இறை இயல்பு, ஆத்மாவின் இயல்பு, ஆத்மா இறையைப் பற்ற உபாய இயல்பு, அந்த உபாயத்துக்கு வரும் தடையான விரோதி இயல்பு, அந்த விரோதி நீங்கி பெறும் பேற்றின் இயல்பு என ஐந்து நிலைகளாகும். இதனை அப்பன் தன் ஆசார்யரான ஸ்ரீமந்நாதமுனிகளிடமிருந்து அறிந்தவர் ஆகையாலே ஐந்து பொருள் நிலை அறிவோன் என்றபடி.

(அகமறுக்கும் இராமர்பதம் ஆசை உள்ளோன்) குருகைக்காவலப்பனுடைய திருவாரதனப் பெருமாள் சக்ரவர்த்தி திருமகன். இராமர் அருளிய சரம சுலோகங்கள் இரண்டு. அதில் சக்ரவர்த்தி திருமகனான "மித்ரபாவநே ஸம்ப்ராப் தம்" (யு.கா.18–3) என்ற சுலோகத்தின் படியே அகங்காரமுடையவன் ஆயினும் பகையின்மை அநுகூலமாயிருக்கை ஆகியவற்றால் நெருங்கி வந்தவனை ஒரு படியாலும் என் பிராணனுக்குக் கேடு வருவதாயிருந்தாலும் அவனை விடமாட்டேன் என்று விரதம் பூண்ட இராம பிரானுடைய திருவடிகளில் அப்பன் ஆசை உடையவரான படியால் அகமறுக்கும் இராமர்பாதம் எனப்பட்டது காணலாம்.

*(ஆழ்வார்கள் மறையதனை ஆய்ந்து உரைப்போன்)* நம்மாழ்வார் அருளிய திருவிருத்தத்தில் (38) "கடமாயினகள் கழித்து" என்ற பாடலில் குருகைக்காவலப்பன் ஆய்ந்துரைத்த ஒரு ஐதீகத்தை நம்பிள்ளை காட்டி உரைப்பர். ஒருவன் உலகுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள ஸம்பந்தம் எப்படிபட்டது என்று கேட்டான். அதற்கு அப்பன் இந்த உலகுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள தொடர்பை நீயா கேட்பது என்றார். அதாவது "ஈச்வரனான இந்த ஜீவாத்மா பிறக்கும் போது எந்த உடலைப் பெற்று மரணத்தின்போது எந்த ஒரு உடலிலிருந்து கிளம்புகிறதோ" என்று பகவத் கீதையில் (15–8) கூறியபடி உறுப்புக்களோடு கூடியிருக்கும் இந்த உடலாகிற இந்த உலகுக்கு ஜீவாத்மாவை ஈச்வரனாகச் சொல்லிற்று.

இந்த உடலுக்கும் இதற்கு ஈச்வரனான ஜீவாத்மாவுக்கும் உள்ள தொடர்பாகிற உடல் உயிர்

தன்மையே உலகுக்கும் ஈச்வரனுக்கும் உள்ளதொன்றாகும் என்பர். மேலும் அந்த மனிதன் அப்பனைப் பார்த்து "எம்பெருமானை எப்போதும் நினத்துக் கொண்டிருக்கும் நீர், அவனை நினைக்க எனக்கு ஒரு வழி சொல்லவேண்டும்" என்றான். உடனே அப்பன் "நான் உனக்கு எம்பெருமானை நினைக்க வழி சொல்கிறேன். நீ அவனை மறக்க ஒரு வழி சொல்வாயாக" என்றார்.

அதாவது ஒரு பொருளானது பொருளாயிருப்பதும் அதற்கு ஒரு பெயர் உண்டாவதும் எம்பெருமான் அதன் உள்ளே உறைதலாலேயே ஆகும். அவ்வாறு இருக்கும் போது அவன் உள்ளுறை நிலையாய் அடைமொழியாய் எந்தப் பொருளைப்பார்த்தாலும் உடலாய் அடைகொளியான எம்பெருமானுடைய நினைவும் வந்தே தீரும். எனவே நினைக்க ஒரு வழி சொல்ல வேண்டுமோ என்றபடி.

மேலும் திருவாய்மொழியில் "சிக்கெனச் சிறிதோரிடமும்" (2–6–2) என்ற பாசுரத்தில் "எங்கும் பக்கம் நோக்கி அறியான்" என்பதற்குச்சேர ஆழ்வார் பக்கல் எம்பெருமானுக்கு உண்டான மிக்க அன்பைத் தவிர்க்கவேணும் என்ற நாச்சிமார் திருமுலைத் தடத்தாலே நெருக்கிலும் அவர்கள் பக்கல் கண் வைக்கவில்லை என்பர்.

இந்த இடத்தில் ஆளவந்தாருக்குக் குருகைக் காவலப்பன் அருளிச் செய்ததைக் காட்டி உரைப்பர். ஆளவந்தாரின் ஆசார்யரான மணக்கால் நம்பி அருளியபடியே குருகைக்காவலப்பனிடத்தில் ஒரு ரகசிய விசேஷம் அறியவேண்டி , ஆளவந்தார் அதனை அறிய கங்கைகொண்ட சோழபுரம் சென்றார். அங்கே குருகைக்காவலப்பன் ஒரு குட்டிச் சுவரில் யோகத்தில் எழுந்தருளியிருந்தார். இவரை இப்போது தடங்கல் செய்யக்கூடாது என்றெண்ணி ஆளவந்தார் சுவருக்கு பின்பு நின்றார். அப்போது குருகைக்காவலப்பனும் திரும்பிப் பார்த்து சொட்டைக் குலத்தில் ஆரேனும் வந்தாருண்டோ? என்று கேட்டார்.

ஆச்சரியப்பட்ட ஆளவந்தார் அடியேன் பின்னே இருப்பது எப்படி தெரிந்தது என்று கேட்க, அப்பனும் "நானும் எம்பெருமானுமாக அனுபவித்திருந்தால் பெரியபிராட்டி திருமுலைத் தடத்தாலும் நெருக்கி அணைத்தாலும் அவள் முகம் கூடப்பாராத எம்பெருமான், என் கழுத்தை அமுக்கி நாலு மூன்று தடவை அங்கே எட்டிப்பார்த்தான். இப்படி அவன் பார்த்தபோதுதான் நான் சொட்டைக் குலத்தில் சிலர் வந்திருக்க வேணும்" என்று அறிந்தேன் என்றாராம்.

இதனால் அப்பன் ஆழ்வார்பால் கொண்ட பக்தியின் பெருக்கால் ஆழ்வார் சொன்ன பாசுரத்திற்கு ஏற்ப, ஆய்ந்து சொல்லும் அநுபவம் அறியலாகும். இதுபற்றியே "ஆய்ந்துரைப்போன்" என்று அருளியது காணலாம். பேயாழ்வாரிடம் பக்திக் கொண்டவராய் அவர் அருளிய மூன்றாம் திருவந்தாதிக்கு ஆழ்வார் திருவடிகளைப் போற்றி "சீரான் கழலே உரைக் கண்டாய் நெஞ்சே உரை" என்று நெஞ்சைப் பார்த்து அருளுவது காணலாம்.

*(செகதலத்தில் குருகூரில் செனித்த வள்ளல்)*

செகதலம் – உலகம். பாண்டியநாட்டில் தாமிரபரணி என்ற பொருநையாற்றங்கரையில் அமைந்த திருக்குருகூர் நம்மாழ்வாரால் பாடப்பெற்ற திவ்ய தேசங்களில் ஒன்று. அந்த நாட்டைத் தலைநகராகக் கொண்டு குருகன் என்னும் அரசன் நீதி தவறாமல் ஆண்டு வந்ததால் திருக்குருகூர் என்று அழைக்கப் பட்டது. வள்ளலான நம்மாழ்வார் அவதரித்த அந்த குருகூருக்கு உட்பட்ட தேசமான அப்பன் கோவிலில் இந்த ஆசார்யார் அவதரித்ததனால் இவரும் வள்ளல் என்று கொண்டாடுவர்.

*(செய்ய குருகைக்காவலப்பன் திருவடிகள்)* – குருகை – பிரம்மன் தவம் செய்து எம்பெருமானை வேண்ட தாமிரபரணி தென்கரையிலுள்ள ஆதி க்ஷேத்திரத்தைக் காட்டிக் கொடுத்து "குரு ச அத்ர மதர்சனம்" என்கிறபடியே "ஆதிநாதனான எனக்கு இங்கு அர்ச்சனை செய்" என்று நாராயணன் அருளியதால் பிரமனும் பெருமானை நோக்கி "குருக அத்ர மதர்சனம்" என்கிறபடியே தங்களுக்கு தரிசனம் கொடுத்த அந்த ஆதி க்ஷேத்ரத்துக்கு குருகபுரி என்று மற்றொரு பெயர் வைக்க விரும்பினான். எம்பெருமானும் இசைந்ததால் அது குருகை ஆயிற்று. இதில் அவதரித்தவர் குருகைக்காவலப்பன் ஆவார். இத்தகைய பெருமைப் பெற்ற குருகைக் காவலப்பன் திருவடிகளுக்கு பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

எப்படிப் பார்த்தாலும் எந்த நிலையில் இருப்பவருக்கும் பகவத்கீதை பயனுடையதாகவே அமையும் என்பது தெள்ளத் தெளிவாகும். இந்த வகையில் பார்க்கும்போது திருதராஷ்டிரன் உயர்ந்த நிலையில் இருக்கக் கூடிய ராஜா. அவருக்கும் கூட பகவத்கீத அமிர்தம் உபயோகம் உடையதாக அமைந்ததை இம் மூவரின் மூலமாக அறியச் செய் கின்றான்.

எப்படிப் பார்த்தாலும் ஏதோ ஒரு நிலையில் நாமும் கூட இருந்து பகவத்கீதாமிர்தத்தை பெற்றுக் கொள்ளும் தகுதி முழுமையாக உண்டு. ஆனாலும் நாம் அர்ச்சுனனின் நிலையில் இருத்தலே சிறந்தது. காரணம், பரமாத்மா இடத்திலே நேரடியாக உபதேசம் கேட்கும் தகுதி மரீஸ்யாதி பிரஜாபதிகளுக் கும், சனகாதிகள் போன் றோர்க்கும் கிடைத்தது. பிறகு பரமாத்மாவிடம் இருந்து நேரடியாக உப தேசம் பெறும் தகுதி அர்ச்சுனனுக்கு மட்டுமே உண்டு. எனவே நாம் அனைவரும் அந்த தகுதியைப் பெறுவதற்காகவே முயற்சி செய்ய வேண்டும். இருப்பினும், இந்த கலியுகத்தில் பரமாத்மா நம் முன் நேரடியாக தோன்றி காட்சியளிக்க மாட்டார்.

ஏன் என்றால் நம் எதிரே வந்து தோன்றினாலும் நாம் அவரிடத்தில் என்னென்ன கோரிக்கைகள் வைப்போம் என்பது அவருக்குத் தெரியும். எனவே, அர்ச்சா மூர்த்தியாக இருக்கும் பரமாத்மாவை நினைத்து அவரருளால் இந்த உபதேசமிர்தத்தை உணர்ந்து நம் மனதில் உள் வாங்கிக் கொள்வோம். நம் வாழ்க்கையை நல்வழியில் செலுத்தி பயனுடையதாக்குவோம். பரமாத்மாவின் அனுக்கிரகத்திற்கு தகுதியான வர்கள் மகாராஜாக்கள் மட்டும்தானா?

வேறு யாரும் இறைவனின் அனுகிரகத்திற்கு தகுதி வாய்ந்தவர்கள் இல்லையா? என்றால் இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் தன்னுடைய கடமைகள் அனைத்தையும் தவறாமல் முழுமையாக செய்து வருபவராக இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்து வருபவர்கள் மீது பரமாத்மாவின் அனுக்கிரகம் நிச்சயம் படும். மேலும், ஸ்ரீமத் பகவத்கீதாமிருதத்தில் பரமாத்மா சில வீரர்களின் பெயர்களை ஆங்காங்கே குறிப்பிடுவதின் மூலம், தனக்கு அவர்கள் மேல் ஏற்பட்ட அனுக்கிரகத்தை தெளிவாக குறிப்பிடுகிறார்.

ஆனால், அதை அவர் துரியோதனனின் வார்த்தைகளின் வாயிலாக நமக்கு தெரியப்படுத்துகிறார். அதுமட்டுமின்றி துரியோதனன் அப்படிப்பட்ட நல்ல வீரர்களிடமும் சத்புருஷர்களிடமும் எவ்வளவு பொறாமைக் கொண்டிருந்தான் என்பதையும், அதனால் அவன் அனுபவித்த துர்பலத்தையும் நமக்கு எடுத்துக்காட்டி, அதன் வாயி லாக பகவானின் அனுக்கிரகம் பெற்றவர்களிடம் பொறாமைக் கொண்டால் எப்படிப்பட்ட விளைவுகள் உண்டாகும் என்பதையும் விளக்கிக்காட்டவே அவ்வாறு செய்துள்ளார்.

மேன்மை பொருந்திய சத்புருஷர்களின் பெயர் களை வரிசையாக இச்சுலோகத்தின் வாயிலாக அறிந்து கொள்வோம். துரியோதனன் தன் குருவான துரோணாச் சாரியிடம் சென்று அவரை இழிவுபடுத்தி பேசியது மட்டும் அல்லாது அங்கு எதிரே இருந்த வீரர்கள் பலரும் மனம் வருந்தும்படி பேசுகிறான்.



# ஸ்ரீமத் பகவத்கீதை



தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி
தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி

*"அத்ர சூரா மஹேஷ்வாஸா பீமார்ஜுனஸமா யுதி யுயுதானோ விராடஸ்ச த்ருபதச்ச மஹாரத:"*

பாண்டவர்கள் சேனையில் பலரும் வீரர்களாகவும் சூரர்களாகவும் இருக்கிறார்கள். வீரமிகு வில்லாளிகள் பெரிய வில்லை கையில் ஏந்தி நிற்கிறார்கள். அவர்கள் அனைவரும் மிகவும் பராக்கிரமம் உடையவர்களாக உள்ளார்கள். வீரர்கள் ஒவ்வொருவரும் பீமன், அர்ச்சுன னுக்கு சமமானவர்களாகி விளங்குகின்றார்கள். மேலும், யுயுதானன், விராடன், துருபதன் போன்ற சிறந்த வீரர்களும் இருக்கின்றனர். துரியோதனனின் இப் பொறாமை வார்த்தைகளால் நமக்குத் தெரிய வருவ தென்ன? சிறிது உன்னிப்பாக கவனித்தால், பாண்டவர்களில் வீரர்கள் பெயரை சொல்வ தென்றால் முதலில் அர்ச்சுனனின் பெயரைத் தான் சொல்ல வேண்டியிருக்கும். ஆனால் துரியோத னன் முதலில் "யுயுதானன்" என்றே குறிப்பிடு கிறான். "யுயுதானன்" என்றால் நன்றாக போர் செய்பவன் என்பது பொருள். இந்த பட்டம் கிருஷ்ணருக்கு தம்பி முறையாகும் யாதவ வீரன் "சாத்யகி" க்கு உரிய பட்டமாகும். பிறகு ஏன் முத லில் "சாத்யகி" பெயரை துரியோதனன் உச்சரித்தான்?

தொடரும்...

***நூலின் பெயர் : ஸ்ரீராமாயண பரிமளம்***
***ஆசிரியர் : உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி***
***கிடைக்குமிடம் : எண்.5/3, முதல் தளம், நாட்டு வீராட்சி தெரு, மைலாப்பூர், சென்னை-600 005. கைபேசி : 98418 84972. விலை ரூ.300/-***




**இராமாவதாரம் தொடங்கி 11 தலைப்புக்களில் வால்மீகி, கம்பன், நம்பிள்ளை முதலான பூர்வாசார்யர்கள் மற்றும் கோவிந்தராஜர் ஆகியோரின் உரை வளம் கொண்டு உரை நிகழ்த்தியதை எழுத்து வடிவில் ஒரு சிறந்த நூலாக விஷய பரிமளம் வீசும்படி அளித்து உள்ளார் இவ்வாசிரியர். முதல் அத்யாயமான இராமாவதாரத் தில் *''ஏதஸ் மிந் அந்தரே விஷ்ணு: உபாயத''*(பா.கா.15-16) என்ற ச்லோகத்திற்கு கோவிந்தராஜர் *"பரித் ராணாய ஸாதூ நாம்''* என்ற பகவத் கீதை தொடரைக் காட்டி *''மஹாத்யுதி:''* என்ற சொல் லுக்கு "ராவண-ராவணி-லவண-கந்தர்வ விநாசாய" என்கிறபடியே இராவணனை இராமனும், இந்த்ரஜித்தை லக்ஷ்மணனும், லவணாசுரனை சத்ருக்னாழ் வானும், ஏழு கோடி அசுர குணம் கொண்ட கந்தர்வர்களை பரதனும் அழிக்க பகவான் ஸங்கல்பம் செய்தார் என்று விளக்கியுள்ளது அருமை. அடுத்து ஸாது பரித்ராண கட்டத்தில் (ப.14) *"அகம் வேத்மி"* என்ற சொற்றொடரை எட்டு விதமாக விளக்கியுள்ளது படிப்போர்க்கு பெரு விருந்தாகும். விச்வாமித்ரன் தனது யாகத்தைக் காக்க இராமனைத் தன்னுடன் அனுப்புமாறு கேட்க, தசரதன் சொன்னதைக் கம்பன் வாயிலாகக்காட்டி, அதற்கு ஸமாதானம் சொல்லுவது படிப்போரை மகிழ்விக்கிறது (ப.15). ஸ்ரீராமாவதார விஷயத்திலும் நால்வர் திருமண விஷயத்திலும் கடலைக் கடக்க யோசனை என்ற கட்டத்திலும் சூரியன் உச்சி அடையும் இந்த அபிஜித் ஹோரை முகூர்த்தமானது விஜயம் எனப்படுவது என்னும் விஷயத்திலும் கோவிந்தராஜருடைய சோதிட நூல் வல்லமையை டாக்டர் வரதராஜன் ஸ்வாமி தெள்ளத்தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். சிறந்த எழுத்தாளராய், அவர்தம் ஆசார்யரான ஸ்ரீஉ.வே. திருப்பதி திருமலை அநந்தாண் பிள்ளை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியிடம் உபய வேதாந்த பயிற்சி பெற்றவராய் விளங்கும் இந்நூலாசிரியர், பதினோரு அத்யாயம் கொண்ட இந்நூலில் ஆசார்யர்களான நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, மணவாள மாமுனிகள் ஆகியோர் அரிய ஆழ்வார் பாசுர உரை நயமும் சேர்த்து உபன்யஸித்து அதனை இந்நூலில் சிறந்து விளங்கும்படி அமைத்தது வாசகர்களுக்கு பெறாப்பேறாகும்.**

**நூறு தலைப்புக்களைக் கொண்டதான இந்நூல், ஆயுளைக் கொடுக்கக் கூடியதும், ஆரோக்யம், புகழ், சகோதரப்பாசம், புத்தி கூர்மை, நன்மையைக் கொடுக்கவல்லது என்றும், மேன்மையை விரும்புமவர்கள் யமநியமங்களுடன் ஆசார்ய அநுட்டானங்களுடனும் நல்லோர்களைக் கொண்டு கேட்க வேண்டும் என்னும் பலச்ருதியே இந்நூல். மற்றும் இந்நூலாசிரியரது சிறப்பு உள்ளங்கை நெல்லிக்கனியாகத் திகழ்கிறது. ஆதலின் இந்த இராமாயண பரிமளத்தின் வாசனையை அனைவரும் நுகர்ந்து வாழ்வில் உய்வோமாக. இந்நூலாசிரியருக்கும் இதனை தொகுத்து வெளியிட்ட ஸ்ரீமாடபூசி அநந்தாழ்வானுக்கும் பாராட்டுகள்.**

**- டாக்டர் வ.ஸெளம்யநாராயணன்.**

அலசுவோம்......
அறிவோம்....
ஆதிகாவிய நாயகர்களை......

# "பரீக்ஷித்" மகா ராஜன்

திரு. சத்யதாரா,
சென்னை,
9894526302.



**இம்மாதம் நாம் அலசவிருக்கும் கதாநாயகன்....! மஹான் வேத வியாஸர் அருளிய ஸ்ரீமத் பாகவத காவியத்தின் துவக்கத்தில் அறிமுகம் கொள்ளும் நாயகன்... அர்ஜுனனின் பௌத்திரன்..! அபிமன்யுவின் புத்திரன்...!**

இன்றைய காலத்திற்கு 5122 ஆண்டுகள் முற்பட்ட காலம். நடைமுறையில் நாம் கொண்டுள்ள கால கணக்குப்படி, தொ.ஆ.மு. 3101 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம். மஹாபாரத நிகழ்வுகள் முடிந்து பாண்டவர்களுக்குப் பின் இரண்டாவது தலைமுறை வரலாறு கொண்ட கலியுகம் துவங்கும் கட்டம். அதுவே மன்னன் பரீக்ஷித் ஆண்ட காலம்.

அர்ஜுனன் மகன் அபிமன்யு. அபிமன்யுவின் மனைவி உத்திரை. இருவருக்கும் பிறந்த மகன் பரீக்ஷித். இவனது பிறப்பே அழிக்கவியலாத பெரும் சரித்திர முத்திரைகள் கொண்டதாம். கணவனை இழந்த உத்திரையின் கர்ப்பத்தில் இருந்த சிசுவை அழித்து பாண்டவ வம்சத்தினை நிர்மூலமாக்க வெறி கொண்டு அலைந்தான் துரோண புத்திரன் அஸ்வத்தாமன். உத்திரையின் கர்ப்பத்தினை சிதைக்க ஒரு அஸ்திரத்தை ஏவினான். "அபாண்ட வீயம்" என்பது அந்த அஸ்திரத்தின் பெயர். துடித்தாள் உத்திரை. "கிருஷ்ணா"... என்று கதறினாள். ஆபத் பாந்தவன்... அனாத ரக்ஷகன் மாயையால் உத்திரையின் கருவினுள் அஸ்வத்தாமனின் அஸ்திரம் அழிக்கப்பட்டது. பாண்டவர்களின் ஒரே வாரிசான கரு காக்கப்பட்டது. கண்ணனால் காக்கப்பட்ட கருவே 'பரீக்ஷித்' என்று ஸ்ரீமத் பாகவத காவியத்தில் அறிமுகம் கொள்வது. பரீக்ஷித் வளர்ந்தான். பருவம் எய்தினான்.

தர்மபுத்திரர், அபிமன்யுவின் புத்திரன் பரீக்ஷித்தை ஹஸ்தினாபுரத்தின் இளவரசனாக ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைக்கிறார். பரீக்ஷித்தின் காலத்தில்தான் கலிபுருஷன் நுழைகிறான். (அதாவது கலியுகம் துவங்குகிறது).

தர்மதேவன் மூன்று கால்களை இழந்து, ஒரே காலினை பூமியில் ஊன்றிக்கொண்டு தள்ளாடியவாறு நின்று கொண்டு இருந்தான். அது போன்றே பூமா தேவி ஒரு பசுவின் வடிவம் தாங்கி, கன்றினை இழந்த தாய் போல் பரிதாபமாக அருகில் நின்றாள். இருவரும் உரையாடினர். தர்ம தேவன் அவளது துக்கத்திற்கு காரணம் கேட்கிறான். "நான்கு கால்கள் உடைய நீ ஒரே காலோடு தள்ளாடி நிற்கிறாய்... ஸ்ரீ கிருஷ்ணனின் பாதக்கமலங்கள் என்மேல் இப்போது படியாமல் போய் விட்டதே..! கலி புருஷன் நுழைந்து தர்மங்களை களங்கப் படுத்த துவங்கி விட்டானே"... என்று விம்முகிறாள். பரீக்ஷித் மன்னன் இந்த உரையாடலை செவியுற்றான். அவர்கள் அருகே, ஒரு நீசன் கோரமான கரிய உருவத்துடன், ஒரு அரசனைப்போன்ற வடிவில் இருவரையும் துன்பத்துக்கு ஆளாக்கிக்கொண்டு இருந்த

**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**“ஸப்தகிரி”, தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**

தையும் கண்டான். உடன் தனது வாளினை உருவி அந்த நீசனை தண்டிக்க முற்பட்டான். அந்த க்ஷணத் திலேயே சரணாகதி அடைந்த நீசன்... என்னை தண்டிக்க வேண்டாம்... நானே கலி புருஷன், பூமண்டலம் முழுதும் தங்களது ஆட்சியே..! (அதாவது தர்மத்தின் ஆட்சியே என்று பொருள் கொள்ள வேண்டும்) எனக்கு எங்கே போக்கிடம்? என்று தாங்களே காட்டுங்கள்..” என்று கதறுகிறான்.

அவ்வமயம் பரீக்ஷித் மன்னன், சூதாடும் இடங்கள், மது அருந்தும் இடங்கள், பெண்ணாசை கொண்டு திரியும் பித்தர்கள் வாழுமிடங்கள், ஒருவரை ஒருவர் அறநெறி தவறி துன்புறுத்தும் இடங்கள்... ஆகிய நான்கு இடங்களிலும் நீ சென்று வாசம் செய்ய அனுமதி அளிக்கிறேன் என்றான். அதில் திருப்தி கொள்ளாத கலி புருஷனுக்கு, மேலும், பொன்னாசை, காமம், குரோதம், மத மாத்சர் யங்கள், அசத்யம்(பொய்) ஆகியவை நிலை கொள் ளும் இடங்களிலும் வாசம் செய்ய அனுமதி அளித் தான். கலியுகத்தின் தாக்கம் துவங்கி விடுகிறது.

பரீக்ஷித் தர்மவான். வேட்டைப்பிரியரான அவன் ஒருமுறை வனம் சென்று, மிருகங்கள் பலவற்றை வேட்டையாடினான். கடைசியில் அடிபட்ட மான் ஒன்று தப்பி ஓடியது. பரீக்ஷித் அம்மானை தேடிக் கொண்டு வில்லை கையில் ஏந்தியவண்ணம் அதன் பின்னே சென்று மானைத்தேடுகிறான். மிகவும் களைப்படைந்து தாகத்தினால் வருந்துகிறான். அருகே ஒரு மாட்டு தொழுவம் காணப்படுகிறது.

அங்கே “சமீகர்” என்று ஒரு மஹரிஷி கடும் தவம் இயற்றிவருகிறார். மானைத்தேடிக்கொண்டு வந்த மன்னர் பரீக்ஷித், கடும் தவம் செய்யும் சமீகர் மஹரிஷியை நோக்கி, தன்னை அபிமன்யுவின் புதல்வன் என்று அறிமுகம் செய்து கொண்டு தன் நிலையை விளக்கினார். தாகமாக இருப்பதாகவும், அருந்த ஜலம் கிடைக்குமா என்றும், மானைக் கண் டீரா என்றும் வினவினார். கடுமையான தவ நிலையில் இருக்கும் சமீகருக்கு மன்னன் நிற்பதும் பேசுவதும் உணர முடியாத நிலை. கண்ணை மூடி, முழு மௌன மாகவே தென்பட்டார். கடும் கோபம் கொண்ட மன் னர் அருகே கிடந்த செத்த பாம்பினை எடுத்து சமிக ரின் கழுத்தில் போட்டார்.

இதனை கண்ணுற்ற சமிகரின் மகன் “..எந்த பாபி என்னுடைய தந்தையின் தோளில் செத்த பாம்பினை போட்டானோ, அவன் யாராக இருந்தாலும், என் சாபத்தினால் தூண்டப்படும் தக்ஷகன் என்ற கொடிய பாம்பினால், இன்று முதல் ஏழு நாட்களுக்குள் கடிக்கப்பட்டு மரணமடையட்டும்...’ -- என்று ஒரு கடுமையான சாபம் கொடுத்து விட்டான்..” அதன்பின் தந்தையைக்கண்டு கலங்கி நின்றான். நடந்தவற்றை முழுவதுமாக தன் ஞான த்ருஷ்டியில் உணர்ந்தார் சமீகர். ஸ்ருங்கி தான் கொடுத்த சாபத்தைப்பற்றி கூறினான். சமீகரோ, மன்னர் மேல் கோபம் எதுவும் கொள்ளாமல், தன் மகன் மீது மிக்க வருத்தம் கொண்டார். தன் மகனை நோக்கி கூறினார்: “நாம் வாழும் நாட்டிற்கு அரசன் பரீக்ஷித். அவரால் நாம் காப்பாற்றபட்டவர்களாகிறோம். மானைத்தேடிவந்த மன்னரை, தாகத்துடன் இருந்த மன்னரை, என்னுடைய தவ நிலையை அறியாமல், ஒரு தவறு செய்துவிட்ட மன்னரை, தண்டிக்க நினைப்பது மிகவும் தகாத செயலாகும். நீயோ சிறிதும் ஆலோசனை இல்லாமல் இந்த சாபத்தை கொடுத்து விட்டாய்.... என்று கடிந்து கொண்டார். மேலும் தன் மகனை நோக்கி, நீ செய்த புண்ணியம் அனைத்தும் நீ கொடுத்த சாபத்தால் அழிந்து விட்டது என்று கூறி மன்னனுக்கு நேர்ந்த நிலையை நினைத்து மிகவும் வேதனைப்பட்டார். பின்பு கௌரமுகர் என்னும் தன்னுடைய சீடனை அழைத்து, மன்னரிடம் நேரில்

சென்று நடந்த அனைத்து விபரங்களையும் தெரியப்படுத்தச்செய்தார். மன்னன் பரீக்ஷித்தோ, தான் செய்த செயலை நினைத்து பெரிதும் வருந்தினான். விதியின் விளையாட்டு என்று துக்கம் கொண்டு கலங்கினான். அரண்மனையில் உள்ள பெரியோர்கள் அனைவரும் ஒன்று கூடி ஆலோ சனை நடத்தினர். முடிவாக மன்னனை, மணி மந்திர ஔக்ஷதம் தெரிந்தவர்களை துணைவைத்து, ஈ, எறும்பு கூட புக இயலாத ஓர் பெரும் ஒற்றைத் தூணுடன் கூடிய மாளிகையை உருவாக்கி அதனுள் தங்க வைத்தனர். மிக்க பாதுகாப்புடன் ஏழு நாட்கள் கடந்தன. ஏழாவது நாள் இறுதியும் வந்தது.

இஃது இவ்வாறு இருக்கையில், தக்ஷகன் என்ற கடுமையான விஷம் கொண்ட நாகம், மன்னனை தீண்ட புறப்பட்டு வந்து கொண்டு இருந்தான். இடையில், காஸ்யபர் என்ற பிராம்மணன் தக்ஷகனை முந்திக்கொண்டு மன்னனிடம் போக முயற்சிக்கை யில், தக்ஷகன் அந்த பிராம்மணனை இடை மறித்து, பேசினான். காஸ்யபர், தான் அனைத்து விஷங்க ளையும் முறிக்கும் திறமை உள்ளவன் என்றும், மன்னனை பாம்பு தீண்டினால், தான் விஷத்தை முறித்து மன்னனை காப்பாற்றி பெரும் செல்வம் அடையப்போவதாகக் கூறினான். தக்ஷகன், அவ் வமயம் தானே அந்த கொடிய நாகம் என்றும், பிராம்ம ணனுக்கு அந்த சக்தி உண்டா?.. அவனால் மன்னனை காப்பாற்ற இயலாது என்றும், இறுமாப்புடன் கூறினான்.

தான் அந்த அந்தணரின் சக்தியை பரீக்ஷை செய்ய விரும்புவதாகவும், அருகில் உள்ள ஓர் பெரும் ஆல வ்ருக்ஷத்தை தீண்டப்போவதாகவும், முடிந்தால், காப்பாற்றுமாறும் கூறி, ஆலமரத்தை கடிக்க, மரம் எரிந்து, கருகி நிர்மூலமானது. காஸ்யபர் அங்கு எரிந்த மரத்தின் சாம்பலை ஒன்றாக குவித்து, மந்திரப்ரயோகம் செய்தார். எரிந்த சாம்பல் குவியல் சிறிது சிறிதாக துளிர்த்தது. துளிர் பெருகி உடனடியாக வளர்ந்து செழிப்பான மரமாகி மீண்டும் நின்றது. இதனைக் கண்டு அதிர்ச்சியுற்ற தக்ஷகன் அவரது திறமையைக்கண்டு மெச்சினான். மன்னனை காப்பாற்றினால் கிடைக்கபோகும் செல்வத்தை விட அதிகமான பொருளை தானே கொடுப்பதாகக் கூறி, திரும்பிச்சென்று விடுமாறு கூறினான். அதை ஏற்றுக் கொண்டபிராம்மணன் தக்ஷகனிடம் இருந்து ஏராள மான பொருளைப் பெற்றுக்கொண்டு தன் வழியே சென்றான். (இதுவே விதியின் வலிமையாம்.)

பின்பு தக்ஷகன் அனேக நாகர்களை அழைத்து, ரிஷிகளைப்போல் வேடம் தரித்து, புஷ்பம், பழங்கள் ஆகியவற்றுடன் மன்னனைக்காணுமாறு செய்தான். தான் ஒரு புழுவடிவம் கொண்டு ஓர் பாத்திரத்தினுள் புகுந்து கொண்டான். மன்னன் கையில் புழு உருவத்தில் தக்ஷகன் குடிகொண்ட பழம் வந்தது. பழத்தை எடுத்து உண்ணத்தொடங்கினான். சூரியன் மறையும் நேரம் ஆனது. புழு பழத்தில் இருந்து வெளிப்பட்டது. இரு கருப்பான சிறு பொட்டுக்கள் போன்ற கண்களையும், சிவந்த நிறமும் கொண்டு அந்தபுழு வெளிப்பட்டது. சூரியன் மறையும் தருணம். ஏழாவது நாள் இறுதிக்காலம். விதி மன்னனின் மனதில் விளையாடியது. தன் மந்திரிமார்களைப் பார்த்த மன்னன், இனி எனக்கு விஷபயம் இல்லை. அந்த ரிஷிகுமாரனின் வாக்கு பொய்க்காமல் இருக்க, இந்த சிறிய புழுவே தக்ஷகன் என்ற ரூபமாக என்னை கடிக்கட்டுமே என்றான். அந்தக்ஷணமே, புழுவானது தன் உண்மை வடிவை எடுத்துக்கொண்டு மன்னனின் கழுத்தைப்பற்றி தீண்டியது. அடுத்த கணம் விஷ நாகம் தீண்டப்பட்ட மன்னன் உயிர் இழந்து கீழே விழுந்தான்.

இந்த வரலாறு பரீக்ஷித் மன்னன் பெற்ற சாபத்தை கூறுவதாம். இப்போது நம்முடைய ஆராய்ச்சியை நெருங்குவோம். மனித வர்க்கத்துக்கு மஹாபாரதம் என்ற மாபெரும் செல்வம் கிடைப்பதற்கு இந்த சாபம் ஒரு துவக்கமாகியது. மன்னன் பரீக்ஷித்தின் மகன் ஜனமேஜயன் தன் தந்தையை தீண்டிய நாகங்களின் அனைத்து வம்ஸத்தையும் அழிக்க ஒரு பெரும் "சர்ப்பயாகம்" செய்கிறான். அனைத்து சர்ப்பங்களும் இழுபட்டு ஹோம அக்னியில் வீழ்கின்றன. இக்கொடுமையை நிறுத்தும் வகையில் ஆஸ்திகர் என்ற பிராம்மணர், யாகம் நடக்கும்கால் – "சர்ப்பயாகத்தை நிறுத்தும் படி" யாசகம் கேட்கிறார். பின் யாகம் நிறுத்தப்பட்டு, வியாசரால் ஆணையிடப்பட்டு வைசம்பாயனர் என்ற சீடர் ஜனமேஜயனுக்கு மஹாபாரதத்தை உபதேசம் செய்தார். – மஹாபாரதம் என்ற ஒப்பற்ற செல்வம் மனிதவர்க்கத்துக்கு கிடைத்தது.



# தர்மம் தலை காக்கும்

- திரு. ஜெ. சுவாமிநாதன்.
சென்னை, 9790772242

**இராமபிரானின் உபதேசம் :**

இராமபிரான் தான் அரசிழந்து காட்டிற்குச் சென்ற சமயத்தில் லக்ஷ்மணனைப் பார்த்து கூறுகிறார்.

இலட்சுமணா! "நான் அதர்மத்திற்கு பயப்படுகிறவன். தப்புக் காரியங்களைச் செய்ய விரும்பாதவன். அயோத்தியில் முடிசூட்டிக் கொள்வது எனக்கு மிகவும் சுலபமானதே. அநீதி மார்க்கத்தில் அரசைப் பெற விரும்பவில்லை. தர்மத்தைக் கடைபிடித்து, நாம் ரக்ஷித்தால் அது நம்மைக் காக்கும்" என்று தர்மத்தைப்பற்றி கூறுகிறார்.

**யக்ஷப்ரச்னம் :**

இது மகாபாரதத்தில் வன பர்வத்தில் உட்பிரிவான ஆரணேய பர்வம் முந்நூற்றுப் பதினான்காவது அத்யாயத்தில் உள்ளது. இதில் கேள்வியும் பதிலும் ஜீவாத்மாக்களின் க்ஷேமத்திற்கு வழிகளைக் காட்டுகின்றன. யக்ஷதேவதை கேட்ட ப்ரச்னங்கள் அனைத்திற்கும் யுதிஷ்ட்ரர் சரியான பதில்களை அளித்தவுடன் சந்தோஷமடைந்த யக்ஷன், வரம் கொடுக்கிறேன் கேள் என்றது.

தருமர் நகுலன் பிழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு யக்ஷன், போர் நடக்கும் சமயம், இப்போது பீமனையோ, அர்ஜுனனையோ பிழைக்க வைக்க விரும்பாமல் நகுலன் பிழைக்க வரம் கேட்கிறாயே என்றான்.

அதற்கு தருமர், "தர்மம் தான் எனக்கு வேண்டும். என் தகப்பனாரான பாண்டுவிற்கு இரண்டு மனைவிகள். குந்தி மற்றும் மாத்ரீ. அதில் குந்திக்குப் பிள்ளையான நான் ஜீவித்திருக்கிறேன், மாத்ரீயின் பிள்ளையும் வேண்டும்" என்றார். அதைக்கேட்ட யக்ஷன், "உம்முடைய தர்மபுத்தியைப் பார்த்து சந்தோஷமடைந்தேன். நீ தர்மம் நழுவாதவன், ஆகையால் எல்லோரையும் பிழைக்கச் செய்கிறேன்" என எல்லோருக்கும் ஜீவனம் கொடுத்தான்.

**மூன்று காரணங்கள் :**

உலகத்திலும் மனிதர்கள் அதர்மத்தை விரும்பாமலிருப்பதற்கு மூன்று காரணங்கள் உள்ளது.

1) பரலோகத்தில் இன்பங்கள் நமக்கு இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம்.

2) அதர்மங்களைச் செய்தால் யம தர்மன் நம்மை அழைத்துச் சென்று தனது உலகத்தில் பல்வேறு சோதனைகளுக்கு ஆளாக்குவான் என்ற அச்சம்.

3) அதர்மங்களைச் செய்யும்போது உலகத்தவர் பார்த்தால், "இவன் மகாபாபி; சாஸ்திரத்திற்கு முரணான காரியங்களைச் செய்பவன், எதற்கும் அஞ்சாதவன். இவனுடன் சேர்ந்தாலே நமக்கும் பாபம் என்று இவனை ஒதுக்கி வைப்பார்கள் என்ற அச்சம்.


**தர்மம் தலைகாக்கும் :**

அதர்மத்துக்குப் பயந்து தர்ம மார்க்கத்தில் செல்லுபவன் என்றைக்கும் துன்பப்பட மாட்டான். அவனுக்கு தெய்வம் சகாயம் செய்யும். அளவற்ற சுகத்தைப் பெறுவான். தர்மோ ரக்ஷதி ரக்ஷித: என்பது நியாயம்.

# தியாக பிரம்மம் ஸ்ரீதியாகராஜர்

சித்திரக் கதை

கதை மூலம்: டாக்டர் கே. ரவிச்சந்திரன்
சித்திரம் : திரு. தும்பலி சிவாஜி




சீடனே! கணபதி! ஆலய மரியாதையையும் பூஜை சம்பிரதாயங்களையும் விமர்சிப்பது தர்மமல்ல. ஸ்வாமியின் பூஜையை நிறுத்தி திரையை விலக்கும் உரிமை இப்பூமியில் எவருக்கும் இல்லை.
அந்த திரையை விட அளவு கடந்த மனதிரைகள் நம்முள் நிறைய உள்ளன. அவற்றை விலக்கமாறு ஸ்வாமியை வேண்டுவோம்.
திரையை விலக்குங்கள்! என்னுள் மனதிரையை விலக்குங்கள் ! திருப்பதி வேங்கட ரமணா! மத்ஸய ரமணா!!!
தியாக ராஜரின் கானாம்ருதத்திற்கு திருவேங்கடமுடையானின் முன்பாக இருந்த திரை தானாக விலகியது. அங்கிருந்த எல்லோரும் இதனைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினர்.
அற்புதம்! நாத பிரம்மம்! தங்கள் அபூர்வ கீர்த்தனையால் ஸ்வாமி திரையை விலக்கி உள்ளார். தங்கள் கீர்த்தனை திருவேங்கடமுடையானையே ஈர்த்தது.
அடுத்த இதழில் இன்னும் ஒரு கதையை பார்த்து படித்து மகிழலாம்.
முற்றும்.

பல் சுவை பகுதி





இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஆறு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்

## பொருத்துக...

| | | |
|---|---|---|
| 1. இராமாநுஜர் | - | அ. விசாகம் |
| 2. நட்சத்திரம் | - | ஆ. புஷ்கல விமானம் |
| 3. மித்ரன் | - | இ. பரீக்ஷித் |
| 4. திருகாட்கரை | - | ஈ. கூரத்தாழ்வான் |
| 5. அபிமன்யு | - | உ. நண்பன் |

1.ஈ, 2.அ, 3.உ, 4.ஆ, 5.இ.



## தெரிந்து கொள்ளலாமே...

“இற்றைப் பறைகொள்வா னன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்”

- ஆண்டாள்

உன்னை விட்டு நீங்காமல் உனக்கே நாங்கள் அடிமை என்று ஆண்டாள் கூறுவது போன்று நாமும் எம்பெருமான் இடத்திலே என்றென்றும் அடிமை பூண்டு இருப்போம்.

## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

வாழியே நாள் விசாகம் மகரமதில் வந்துதித்தான்

மகரமதில் விசாகம் நாள் வந்துதித்தான் வாழியே

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...

## விடுகதை பகுதி...

1. மண்ணுக்குள் இருப்பான் மங்களகரமானவன்?
2. ஏழு குதிரைகளின் தேரில் வரும் மன்னவன் ?
3. கிண்ணம் போல் பூ பூக்கும், பானைப்போல் காய் காய்க்கும்?

1. மஞ்சள், 2. சூரியன்
3.பூசணிக்காய்



Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 501. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.


25-11-2021 முதல்
29-11-2021 வரை
நடைபெற்ற திருமலை
ஸ்ரீவராஹ ஸ்வாமி
ஆலய
ஜீர்ணோத்தாரண
அஷ்ட பந்தன
மஹா
சம்ப்ரோக்ஷண
திருக்காட்சிகள்













SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by
Tirumala Tirupati Devasthanams Printing on 25-12-2021 & posting at
Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India
under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023
"LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(5)/2021-2023"
Posting on 20th of Every month.

